மாலைமணி

ஆசிரியர் : பி.எஸ்.இளங்கோ



பொன் விழா இதழ்

மாலைமணி

ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 1 | 27—9—59 | ஒலி 50

மணிவிழா!

நமது அறிஞர் அண்ணாவுக்கு நாமெல்லாம் பொன் விழா கொண்டாடி பூரிப்படைந்திருக்கிறோம்! பெருமிதமும் கொண்டு களிப்புக் கடலில் மூழ்கிக் கிடக்கிறோம்!

சில பலத் தலைவர்களைப்போல் நமது அண்ணா அவர்கள் இது போன்ற விழாக்களை விரும்புவதில்லை! "ஒருவனுக்கு வயதாகி வருகிறது என்பதில் ஏதும் பெருமையில்லை—அது அவனுடைய சாதனையுமல்ல! அதில் வெற்றி முழக்கமிடுவதிலும் அர்த்தமில்லை" என்று கூறி இருப்பதொன்றே போதும் நமது அண்ணாவின் பெருமையை எடுத்து விளக்கிட!

நமது அண்ணா இந்த பொன் விழாவை விரும்பாவிட்டாலும், தமிழகம் மிகச் சிறப்போடு இந்த விழாவைக் கொண்டாடிக் களித்திருக்கிறது!

அண்ணா ஒரு அறிஞர்—அவருக்குப் புகழும் பெருமையும் தேவையில்லை! ஆனால். நாம் அவரைப் பெருமைப்படுத்த வேண்டியது, பாராட்ட வேண்டியது கடமை எனக் கருதுகிறோம்!

எனவேதான் நாம் அண்ணாவைப் பாராட்டி, அவருடைய திறமையைப் போற்றி மகிழ்ந்து கொண்டிருக்கிறோம்!

இந்த விழா அவருக்கு பெருமையளிக்காது என்றாலும் நாட்டு மக்களுக்கு நல்ல உணர்ச்சியை அளிக்கும், உற்சாகத்தை அளிக்கும்—நாட்டு விடுதலையின்மீது ஒரு புது நாட்டமும் ஏற்படும்! எனவேதான் அந்த விழாவை நாம் மிக மிகச் சிறப்புடன் கொண்டாடி இருக்கிறோம்!

அண்ணாவுக்கு பொன் விழா முடிந்து விட்டது! அடுத்து மணி விழா வர இருக்கிறது! இதற்கிடையில் எத்தனையோ விழாக்களை நாம் நடத்தித் தீர வேண்டிய நிலையில் இருக்கிறோம்! இந்த விழாக்களை சுலபமாகவோ, எளிதாகவோ நடத்த முடியாது! நாம் பலப் பல சாதனைகளைச்செய்த பின்பு, நாம் பல தியாகங்களைப் புரிந்த பின்புதான் இந்த விழாக்களை நாம் நடத்த முடியும்!

அண்ணாவின் பொன் விழாவுக்கு அடுத்து நாம் நடத்த வேண்டிய சில்லறை விழாக்கள் எத்தனையோ உண்டு!

இந்திக்கு பல்லக்குக் கட்டி, கொட்டு முழக்கோடு பந்த் வீட்டிற்கு அனுப்ப வேண்டியது நம்முடைய முதல் விழாவாகும்!

அடுத்து—அடுத்து என்றால் வருகிற 1962-ல் சர்வாதிகார வெறி பிடித்தலையும் பாசிச கும்பல்களுக்கு பிரிவு உபச்சாரம் செய்து, வாழ்த்தி—"இனி நீங்கள் நாட்டை ஆண்டால் நாடு தாங்காது" என்று போற்றி அவர்களை வீட்டுக்கு அனுப்பும் விழாவை சிரோடும் சிறப்போடும் நடத்த வேண்டும்! இதற்கு இன்று முதலே இளைஞர் பட்டாளம் பணி புரிய வேண்டும்!

இதற்கு அடுத்து—இதற்கு அடுத்து என்றால் அண்ணாவின் மணி விழாவிற்கு முன்பு வட நாட்டு அரசுக்கு மரண விழா நடத்த வேண்டும்! இந்த மரண விழாவை காங்கிரஸ்காரர்களின் விருப்பத்தையொட்டி பூவிருந்த வல்லியிலேயே நடத்த வேண்டும்!

பூவிருந்தவல்லியில் நடத்த வேண்டிய அந்த மரண விழாவிற்கு நமது மதிப்பிற்குரிய காமராஜரை தலைமை தாங்கச் செய்ய வேண்டும்! அந்த மரண விழாவை—நண்பர் ராஜாராம் நாயுடுவை—சேச்சே! கூடவே கூடாது அதுபோன்ற ஆட்களுக்கெல்லாம் அங்கு வேலையே இருக்காது—பக்தவத்சலத்தைக் கூப்பிட்டு துவக்கி வைக்கச் சொல்ல வேண்டும்! "பக்தவத்சலத்தைக் கூப்பிட்டுத் துவக்கி வைப்பது ஒன்றும் பெருமையில்லை, பெரிதும் இல்லை" என்று நினைத்தால் கனம் சுப்பிரமணியம் அவர்களைக் கூப்பிட்டு இந்தப் பணியை செய்யச் செய்யுங்கள்! தான் பெற்றெடுத்த குழந்தையாக குல கல்வித் திட்டத்தை கவலைப்படாமல் மனந் துணிந்து கொன்று புதைத்தவர் தானே—சுலபமாக வருவார்! அதற்கேற்ப, சூழ்நிலையை இன்று முதலே உருவாக்கி வாருங்கள்!

இந்த மரண விழாவுககு அடுதது நாம், நமது அண்ணாவின் மணி விழாவை நடத்தி மகிழ வேண்டும்!

விடுதலை பெற்ற சுதந்திர திராவிடத்தில் அண்ணாவுக்கு 'மணி விழா நடக்கிறது என்றால் அது அவருக்கும் பெருமை, நமக்கும் பெருமை—நாட்டிற்கும் மதிப்பு!

இத்தனை பணிகளையும் இன்னும் பத்தாண்டிற்குள் செய்ய வேண்டும்! ஆம் செய்யவேண்டும்—நிச்சயமாகச் செய்யவேண்டும்!

அடுத்த பத்தாண்டு காலத்தில் வரப்போகிற அண்ணாவின் மணி விழா சுதந்திர திராவிடத்தில் நடைபெற வேண்டும் என்று கூறி இந்த மாலை மணி சிறப்பிதழை உங்களுக்குப் படைக்கிறோம்!

ஒலிக!

வாள்க!

சென்ற சில தினங்களுக்கு முன்பு சென்னையில் நடைபெற்ற பாரதியார் விழாவில் நமது கனம் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் தமிழ் மொழியின் வளர்ச்சியைப் பற்றி நீண்டதோர் ஆராய்ச்சி செய்து—எப்படி தமிழை வளர்க்க வேண்டும் என்று ஓர் விளக்கவுரையும் செய்திருக்கிறார்! மெத்த மகிழ்ச்சி! மெத்த மகிழ்ச்சி!

நமது கனம் சுப்பிரமணியம் தமிழ் மொழியின்மீது அக்கறையும், ஆர்வமும் கொண்டிருப்பதைக் கண்டு மெத்த மகிழ்ச்சி! மெத்த மகிழ்ச்சி!

ஆனால் அவர் செய்த ஆராய்ச்சியில் பொருள் இருக்கிறதோ இல்லையோ அது நமக்குத் தெரியாது! ஆனால் மண்டைக்குள் கனம் கொஞ்சம் அதிகமாகி இருப்பது மட்டும் மிக நன்றாகத் தெரிகிறது!

தமிழ் மொழி வளராததற்கு காரணம் நாமெல்லாம் "அது ஒலிக, இது ஒலிக" என்று கூச்சல் போடுவதுதானாம்! நாமெல்லாம் "ழ"கர சிறப்பை அறியாதவர்களாம், தெரியாதவர்களாம்! எனவே "ழ"வுக்கு பதில் 'லி"யை உபயோகித்து "ஒலிக" என்று கூச்சல் போடுகிறோமாம்! அமைச்சர் சுப்பிரமணியம் வெட்கமில்லாமல் இப்படிக் கூறுகிறார்! வேதனைப்படாமல் இப்படிக் கூறுகிறார்! அமைச்சர் சுப்பிரமணியம் நிதிக்கு மட்டும் அமைச்சரல்ல—அவர் 'மதி"க்கும் அமைச்சர்! அதாவது கல்விக்கும் அமைச்சர் என்கிறோம்! அவர் கல்வி அமைச்சராக இருக்கும் நாட்டில் இந்த நிலை இருக்கலாமா? அது ஒழிந்து போகட்டும்!

"ஒழிக" என்று கூச்சல் போடுபவர்கள் அத்தனை பேரும் "ழ"வைஉபயோகப்படுத்தாமல் "லி"த்யைதான்உபயோகப்படுத்தி வருகிறார்களா?

ஏதோ ஒரு சிலர் இருக்கலாம்—"ழ" எழுத்தை உச்சரிக்கத் தெரியாதவர்கள், முடியாதவர்கள் "ஒலிக" என்று கூச்சல் போடலாம்! இதனால் அண்ணாதுரைக்கும் "ழ" தெரியாது, கருணாநிதிக்கும் "ழ" தெரியாது, நெடுஞ்செழியனுக்கும் "ழ" வராது என்று கூறுகிறீர்களா?

"ழ" எழுத்தின் சிறப்பை அறிந்தவர்கள் ராஜாராம் நாயுடு தான், காமராஜர்தான், கக்கன்ஜீதான் என்று கூறுகிறீர்களா?

எங்கள் தொண்டர்களில் சிலர். பழக்க வழக்கத்தின் காரணமாகவும், சூழ்நிலையின் காரணமாகவும் ஒலிக என்று கூச்சல் போடலாம்!

ஆனால் உங்களிடம் உள்ள தலைவர்களில் பாதிக்குமேல் "வாள்க" என்று சொல்லுபவர்கள்தானே இருக்கிறார்கள்!

உங்களிலே எத்தனையோ பேர் "வாய பயம்" இல்லையா? உங்கள் தலைவர்களில் எத்தனையோ பேர் "பொயப்பு" என்று கூறவில்லையா? "கியக்கு" என்று சொல்லவில்லையா?

நீங்கள் என்ன அத்தனை பேரும் பண்டிதர்களா? அத்தனை பேரும் புலவர்களா? நாங்கள் மட்டும் தற்குறிகளா? கைநாட்டுப் பேர்வழிகளா?

உங்கள் அமைச்சர்களிலே பல பேருக்கு "ழ" என்னும் எழுத்து தமிழா?-ஆங்கிலமா, அல்லது இந்தியா என்றுகூடத் தெரியாது? எங்களையா நீங்கள் பழிக்கிறீர்கள்!

எங்கள் தொண்டர்களிலே ஆயிரம் பேரை நிறுத்தி வைக்கிறோம்! அவர்களை ஒழிக என்றும் கூச்சல் போடச் சொல்லுகிறோம்! உங்கள் தலைவர்களிலே ஒரு பத்து பேரைக் கொண்டு வந்து "வாழ்க" என்று சொல்லச் சொல்லுங்கள் பார்க்கலாம்! ஒரு தலைவருக்காவது நாக்கு பிரளுகிறதா என்று பார்ப்போம்!

உங்கள் கோயம்புத்தூர் தமிழை தஞ்சை மக்கள் கேட்டால் சிரிப்பார்கள்! இதுவும் தமிழா என்று பழிப்பார்கள்.

தஞ்சையிலே "வாங்க" என்பது—இங்கே "வா" என்றாகி விடுகிறது.

தஞ்சையிலே "விலகிப் போ" என்றால்—இங்கே "ஒத்திப் போ" என்கிறார்கள்.

தஞ்சையிலே "பலகாரம்" இங்கே "நாஸ்தா".
தஞ்சையிலே இடியப்பம்—இங்கே "இயாப்பம்".
தஞ்சையிலே "பழம்"—இங்கே பளம்.
தஞ்சையிலே "கிழங்கு"—இங்கே கியங்கு.

தஞ்சையில், படிக்காத முட்டாள்கூட "வண்டியை இழு"என்பான். இங்கே படித்த மேதைகள்கூட வண்டியை "இஸ்துகினே" போ என்கிறார்கள்.

(11-ம், பக்கம் பார்க்க)

நாட்டிற்கே நாகரீகத்தை ஊட்டியவர் நமது அண்ணா !

ஒப்பற்ற அறிஞன் ! உயர்வற்ற பெரும் தலைவன் !

ஈடு இணையில்லா பண்பாளன்! எங்குமே கிடைக்காத குணாளன்!



நாவலர் பாராட்டுரை!

அறிஞர் அண்ணாவின் 50வது ஆண்டு விழாவும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பத்தாவது ஆண்டு விழாவும் இங்கே கொண்டாடப்படுகிறது!

நம்மையெல்லாம் ஆளாக்கிவிட்டு, நல்ல அறிவுரை கூறி வரும் நமது அண்ணா அவர்களின் பொன்விழா நாகூர் அனிபாவின் இன்னிசையுடன் தொடங்கியது—நடிப்பிசைப் புலவர் கே. ஆர்; இராமசாமியின் இன்னிசையுடன் முடிவடைய இருக்கிறது!

அண்ணாவுக்கு ஐம்பது வயது ஆகிறது என்பதைத் தெரிந்து கொண்டு—இந்த விழாவை மிக்க சீரும், சிறப்போடும் கொண்டாட வேண்டும் என்று இரண்டு திங்களுக்கு முன்பே நாங்கள் முயற்சி செய்தோம்! நாங்கள் அப்படி முயற்சி செய்து கொண்டிருந்ததைக் கேள்விப்பட்ட அண்ணா-என்னை உடனே வரும்படி அழைத்தார்! நானும், ஏதோ முக்கிய விஷயம் இருக்குமென்று நினைத்து உடனே அவரைப் பார்க்கச் சென்றேன்!

"நீ, எனக்கு ஏதோ பொன் விழா நடத்த முயற்சி செய்துக் கொண்டிருப்பதாகக் கேள்விப் பட்டேன்! அந்த முயற்சியில் நீ இறங்காதே!

"நான் 50 ஆண்டைக் கடந்து 51வது ஆண்டை எய்தியது இயற்கையாக நடந்த ஒன்று. இதில் நான் செய்த வெற்றிச் செயல் ஒன்றுமில்லை! நான் சாதித்த சாதனை ஏதாவது இருக்குமானால் விழா கொண்டாடலாம். ஆனால் 50 வயதைக் கடப்பது என்பது எல்லோருக்கும் நடக்கும் ஒருஇயற்கையான செயல் தான்! இதற்காக நீங்கள் என்னைப் பாராட்ட வேண்டிய அவசியமில்லை! பாராட்டுவதற்கும் ஒன்றுமில்லை!" என்று கூறி என்னை அனுப்பி வைத்தார்!

இந்தப் பண்பை நீங்கள் வேறு எந்தத் தலைவரிடமும் காணமுடியாது! இப்படிப்பட்ட பெருந்தன்மையுள்ள ஒரு தலைவரை, எங்கேயாவது காட்டுங்கள் பார்க்கலாம்? எனக்கு 50 வயது ஆகிறதே, ஒரு பொன் விழா நடத்துங்களேன், எனக்கு அறுபது வயது ஆகிறதே ஒரு மணி விழா நடத்துங்களேன்" என்று கேட்கும் தலைவர்கள் எங்கு எத்தனையோ பேர்களுண்டு! ஆனால் அண்ணா ஒருவர் தான் "எனக்கு விழா நடத்தாதீர்கள்" என்று கூறிடும் அளவுக்கு நல்ல பண்பை பெற்றிருக்கிறார்!

"அண்ணா அவர்களுடைய அறிவுரைகளை நினைந்துநினைந்து, அவர் கற்றுத் தந்த நல்ல பாடங்களை உணர்ந்து உணர்ந்து, அவருடைய அருமை பெருமைகளை—அறிவுத் திறனை எண்ணி எண்ணிப் பூரிப்படையும் வகையில், மாற்றாரும் பாராட்டும் அளவுக்குப்பெருமையும், ஈடு இணையற்ற புகழையும் எண்ணும்போது நம் உள்ளமெல்லாம் களிகொள்ளுகின்றன. மாற்றார் நாவெல்லாம் ஊறுகின்றன, சிந்தித்தால் சிந்தையெல்லாம் இனிக்கிறது.

"மாற்றார்கள் சொல்லுகின்றனர்—'அண்ணாதுரை திராவிட நாடு பற்றி வெறும் கனவு காண்கிறார்; ஒன்றும் நடவாது' —என்று! அதற்கு அண்ணா பதில் சொல்லும் போது, 'காண்கின்ற கனவை நல்ல கனவாகத்தான் காண்போமே' என்றார். 'பாரில் எத்தனையோ பேர் எத்தனை எத்தனையோ கனவுகளைக் கண்டிருக்கின்றனர். காந்தியார் சபர்மதி ஆசிரமத்திலிருந்து கொண்டு எத்தனைக் கனவுகள் கண்டிருப்பார். இந்தியாவின் எதிர்காலம் பற்றி! அலிப்பூர் சிறையிலிருந்தபோது பண்டித நேரு, எத்தனைக் கனவுகள் கண்டிருப்பார்? ஐரோப்பா முழுதும் கட்டியாள வேண்டுமென்று திட்டமிட்டுப் போராடிய நெப்போலியன் எத்தனை எத்தனை கனவுகள்கண்டிருப்பான்? சைபீரியா பனிப்பாலைவனத்தில் அலைந்து திரிந்த காலத்தில் லெனினும், ஸ்டாலினும் எத்தனைக் கனவுகள் கண்டிருப்பார்கள்? அவர்களே கனவு கண்டபோது நாம் ஏன் கனவு காணக் கூடாது? நம் கனவு நனவானால் எப்படித் தாங்கிக் கொள்ள முடியும் என்று கருதிதான் அவர்கள், நம்மைப் பார்த்து அப்படிச் சொல்கின்றனர், நம்முடைய கனவு நிச்சயம் நனவாகத் தான் போகிறது!

நாம் பெரியாரின் இயக்கத்திலிருந்து பிரிந்து வந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தை துவக்க முடிவு செய்த பின்பு—"துவக்க விழாவை எந்தத் தேதியில் நடத்தலாம்? செப்டம்பர் முதல் தேதி

(10-ம் பக்கம் பார்க்க)

நம் அண்ணாவுக்கு பொன் விழா!

கவிஞர்கள் கவிதை புனைவார்கள்! காவிய கர்த்தாக்கள் காவியமியற்றுவார்கள்!

ஷேக்ஸ்பியர் பாராட்டுவான்! இங்கர்சால் புகழ்ந்திருப்பான்!

அண்ணா பெருமை பற்றி கே. ஏ. மதியழகன்!

இரண்டு சம்பவங்கள் எனக்கு மகிழ்ச்சி ஊட்டும் சம்பவங்களாக இருக்கின்றன! கடந்த வாரத்தில் எனக்கு நடைபெற்ற திருமண நிகழ்ச்சி ஒன்று, அண்ணாவின் 50-வது பிறந்த தின விழா நிகழ்ச்சி ஒன்று! நான் திருமண மகிழ்ச்சியிலே திளைத்துக் கொண்டிருக்கும் போது தான் எனது அண்ணனின் 50-வது பிறந்த தின விழாவும் நடைபெறுகிறது! இதைக் கண்டு நான் மிக மிக பெருமிதம் கொள்ளுகிறேன்! நான் மட்டுமல்ல தமிழகமே, தமிழகம் மட்டுமல்ல மனித சமுதாயமே பெருமிதங் கொண்டு பூரிப்படைந்து கிடக்கிறது!

கவிஞர்கள் கவிதை புனைவார்கள்!

காவியக்கர்த்தாக்கள் காவியமியற்றி அண்ணாவின் பெருமையை எடுத்து எடுத்துச் சொல்லுவார்கள்!

பாடகர்கள் நம் அண்ணாவின் பெருமையை பாட்டாக இயற்றி, அதைப் பாடிப்பாடிக் களிப்பார்கள்!

நேற்று முன் தினம் நண்பர் எஸ். எஸ். ராஜேந்திரன் 51 பொன் காசுகளை—"அண்ணா உங்கள் பொன் குணத்திற்கு உலகத்திலே ஈடு இணை எதுவுமே இல்லை—நான் தருகிற இந்த பொன் காசுகள் உங்கள் குணத்திற்கு ஈடல்ல" என்று கூறி அண்ணாவுக்கு காணிக்கையாக வைத்திருக்கிறார்!

ராஜேந்திரன் மட்டுமல்ல! தமிழகமே! இந்த பெருமிதத்தில் மூழ்கிக் கிடக்கிறது! தோழர்களிடையே உற்சாகம் பெரு வெள்ளமாக பெருக்கெடுத்து ஓடுகின்றது!

தமிழகம் எங்கும் தோரணங்கள் கட்டி, வீதி தோறும் அலங்காரம் செய்து—அண்ணன் பிறந்த தின விழாவை பெரு விழாவாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்!

நம்முடைய அண்ணன் பெற்றிருக்கும் தம்பிமார்கள், இளைஞர், தோழர்கள் அத்தனை பேரும் சாதாரணமானவர்கள் அல்ல! எதற்கும் அஞ்சாத வீரர்கள்!

அன்பு மனைவியின் கன்னத்திலே முத்த மிட்டு விட்டு, காதல் மொழி பேசிவிட்டு—

"மரணமா? ஆணையிடுங்கள்!"

"தலை கொய்யப்படுமா? கவலைப்பட மாட்டோம்!

"அடக்கு முறையா? அண்ணா அதைப் பூச்செண்டாக ஏற்றுக் கொள்வோம்!"

"சிறைச்சாலையா? அது நமக்கு மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை!"

'எங்கள் உடல், பொருள், உயிர் அத்தனையும் காணிக்கையாக்க காத்திருக்கிறோம்—கட்டளையிடுங்கள், கட்டளையிடுங்கள்" என்று கூறிடும் எதற்கும் அஞ்சாத வீரர்களைத்தான் நமது அண்ணன் தம்பிகளாக பெற்றிருக்கிறார்கள்!

தமிழகத்திலே எத்தனையோ தலைவர்கள் இருக்கிறார்கள்! நோட்டுகளை பெற்றிடும் தலைவர்களும், நயமாகப் பேசி ஓட்டுகளை பெற்றிடும் தலைவர்களும் இங்கே ஏராளமாக இருக்கிறார்கள்!

நம்முடைய அண்ணா அப்படிப்பட்ட தலைவர்களின் பட்டியலிலே சேர்ந்தவரல்ல! நாமும் அப்படிப்பட்டவர்கள் அல்ல! நமது அண்ணாவுக்கு பல்லாயிரக் கணக்கான உயிர்ச் சீட்டுகளை விலையாகக் கொடுப்பவர்கள் நாம!

உலகத்திலே எந்தத் தலைவனுக்கும் இல்லாத பேறு, புகழ் நமது அண்ணாவுக்குத் தான் கிடைத்திருக்கிறது! உலகத்திலேயே இவர் தான் அண்ணா! அகம் குளிர, உள்ளம் மகிழ, பெரியவர்கள் முதல், இளைஞர்கள் வரை அண்ணா என்று அழைக்கப்படும் ஒரே ஒரு தலைவர் நமது அண்ணாதான்! இதற்கு ஈடு இணை வேறு என்ன தான் இருக்கிறது!

அண்ணா என்று சொன்னால் அந்த வாய்க்கு ஆயிரம் முறை சர்க்கரை கொட்டலாமே! இந்த பாசத்திற்கு ஈடு, இந்த நேசத்திற்கு இணை, இந்த அன்புக்கு சமமான பொருள் உலகத்தில் வேறு என்ன தான் இருக்கிறது!

உலகப் பேரழகி கிளியோபட்ராவை ஷேக்ஸ்பியர் எப்படி எப்படிப் புகழ்ந்து பாராட்டி இருக்கிறார்! அவளுடைய உடலில் மின்னும் அழகைப் பற்றி, அந்த அழகில் மின்னும் வண்ண ஜாலங்களைப் பற்றி புகழ்ந்திருக்கிறார்!

ஷேக்ஸ்பியர் நமது அண்ணாவைக் கண்டிருந்தால் அந்தப் புகழை—நமது அண்ணாவின் சொல்லுக்கு இருக்கும் அழகைக் கண்டு வியந்து பாராட்டி இருப்பார்!

அமெரிக்க நாட்டு இங்கர்சால் இப்போதிருந்திருந்தால் தென்னாட்டிற்கு நிச்சயமாகத் வந்து நமது அண்ணாவைப் பாராட்டி இருப்பான்!

பெர்க் சட்ட சபைக்கு வந்து-கைபொத்தி, வாய்பொத்தி-அழகான சட்டமன்ற பேச்சுகளைக் கண்டு வியந்திருப்பான்!

நமது அண்ணாவை கால்ஸ்வொர்த்து, இப்சான் என்றெல்லாம்! மாற்றார்களும் போற்றுகிறார்கள்!

நடிகர்கள் புகழ்கிறார்கள்! அவர்கள்—"அண்ணாவுக்கு ஈடு அண்ணாதான்" என்று பாராட்டுகிறார்கள்!

பெரியார் இராமசாமிகூட "எம். ஏ. படித்த பட்டதாரி அரிதாரம் பூசிக்கொண்டு நாடகத்திலே ஆடுகிறார்கள்" ஒருதடவை என்றுகூறினார்!

அண்ணா திரையுலகில் ஒரு பெருமதிப்பை அடைந்திருக்கிறார்!

இந்த ஜொலி ஜொலிப்புக்கு காரணம் என்ன? தகதகவென்று மின்னுவதேன்? மின்சார வேகத்தில் பாய்ந்து வந்து நம்மையெல்லாம் தாக்கக் காரணம் என்ன?

டாக்டர் லோகியா-"தென்னாட்டில் ஒரு பிரமாண்டமான இயக்கத்தை அண்ணாதுரை நடத்தி வருகிறார் என்று கூறி இருக்கிறார்!

நான் சமீபத்தில் பெங்களூருக்கு போயிருந்த போது திரு. அனுமந்தையாவை சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது! அவர் பேசும் போது கூறினார் "தெற்கில் வலிவு பொருந்திய ஒரு சக்தி உருவாகிக் கொண்டிருக்கிறது! என்று நம்மைப் பற்றிக் கூறினார்

காலஞ்சென்ற தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களை ஒரு தடவை சந்தித்தபோது அவர் கூறினார்-"தம்பி முன்பெல்லாம் திரு. வி. க. நடை என்று ஒன்று தமிழ் எழுத்துலகில் இருப்பதாகக் கூறுவார்கள். இப்போது அது மாறி விட்டது. அண்ணாதுரை நடை என்று ஒன்று ஏற்பட்டிருக்கிறது! உங்களுடைய தலைவர் அண்ணாதுரையின் நடைதான் நம்முடைய இளைஞர்களுக்குப் பிடித்திருக்கிறது" என்றார்.

முதலமைச்சர் காமராஜரும் அண்ணாவும் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்த அந்த பெரும் வாய்ப்பை காணும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அந்த மூன்று மணி நேரத்தில் நான் கண்ட காட்சியை என்றுமே மறக்க முடியாததாகும். அங்கு நிலவிய மரியாதையைக் கண்டு நானே வியந்து போனேன்.

மாற்றார்கள் எப்படி எப்படி புகழ்ந்து பேசி இருக்கிறார்கள் என்பதை நாம் அறியும் போது உள்ளபடியே நமக்கெல்லாம் பெருமையும், பூரிப்பும் தான் ஏற்படுகின்றன.

அண்ணாவிடத்தில் எளிமை மட்டுமல்ல நகைச்சுவையும் நிரம்பி இருக்கிறது என்பதை நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

சென்னை ஜவர் வழக்கிலே தண்டிக்கப்பட்டுசிறைச்சாலையில் தண்டனை அனுபவித்துக்கொண்டிருந்த நேரத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி என் கவனத்திற்கு வருகிறது. நமது துணைப்பொதுச் செயலாளர் என். வி. என். அவர்கள் படுத்து குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்த சமயம் நமது அண்ணா அவர்கள் அங்கிருந்த கத்தரிக்கோலை எடுத்து நமது என். வி. என் அவர்களின் மீசையில் ஒன்றை கத்தரித்துவிட்டார்கள். அவருடைய முகம் சகிக்கவில்லை.

மறுநாள் இவருடைய துணைவியார் சிறைச்சாலைக்கு வந்து இவரைப் பார்க்க வந்தார். நடராஜன் அவர்களோ கத்தரிக்கப்பட்ட மீசை பக்கம் கையை வைத்துமூடிக்கொண்டே பேசிக் கொண்டிருந்தார். 'ஏன் கையை அந்தப்பக்கமே வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்" என்று இவருடைய துணைவியார் கேட்டார்கள். 'ஒன்றுமில்லை" என்று நமது என். வி. என். சொல்லி மழுப்பினார்கள். முடிவில் அந்த அம்மையார் இவருக்கு ஒரு மீசை இல்லாததைக் கண்டுபிடித்து விட்டார்கள். இப்போது கூட நமது அண்ணா இதைச் சொல்லி சொல்லி சிரிப்பார்கள்,

நமது அண்ணா அவர்கள் மிக மிக பயந்த சுபாவ முடையவர்—தைரியமில்லாதவர் என்று சிலர் சொல்லக் கூடும். ஆனால் அவருக்கு இருக்கிற தைரியம், துணிவு வேறு யாருக்குமே இருக்க முடியாதுஎன்றுதான் சொல்லுவேன்.

ஒரு தடவை பண்டித நேரு சென்னை பிரபாத் டாக்கீசுக்குப் பக்கத்திலுள்ள ஒரு தெருவில் பேசிக்கொண்டிருக்கும் போது - திலகர் செய்த மோசடியைப் பற்றி ஒரு துண்டறிக்கை போட்டு, தானே அந்தக்கூட்டத்திலுள்ளவர்களிடம் கொடுத்து விட்டு வந்தார்.

அந்தக் காலத்தில் நேரு பண்டிதரின் கூட்டத்தில் இது போன்ற துண்டு அறிக்கையைக் கொடுக்கவேண்டுமென்றால் எவ்வளவு துணிவு வெண்டும் என்பதை நினைத்தால் அண்ணாவுக்குள்ள தைரியம் வேறு யாருக்குத்தான் வரும் என்று தான் நினைக்க வேண்டி இருக்கறது.

அண்ணா அவர்களின் பக்கத்தில் இருந்து பணிபுரிவது யாருக்கும் கிடைக்காத வாய்ப்பு. எங்களை ஆட்கொண்டிருக்கும் அண்ணா. உங்களைக் காட்டிலும் உலகத்தில் ஒரு பெரும் சிறப்பு எங்களுக்கு எதுவுமே இருக்க முடியாது. என்ன அந்த சிறப்பு என்று கேட்கலாம்,

(12-ம் பக்கம் பார்க்க)

யாருக்கும் கிடைக்காத ஒரு அதிமேதை நமக்கு கிடைத்திருக்கிறார் !

அண்ணாவுக்கு ஈடு அண்ணா தான் !

சம்பத் பாராட்டுரை !

இன்றைய தினம் நமது அருமை அண்ணன் அவர்களுடைய 50 வயது நிறைவு பற்றி பலர் பல பட புகழ்ந்து பேசிய நேரத்தில் என்னுடைய கவனமெல்லாம் பல ஆண்டுகளுக்கு முன்பு செல்லுகிறது!

இருபது ஆண்டுகளுக்கு முன்பு அண்ணா அவர்கள் ஈரோட்டிற்கு வந்தபோது நான் மிக மிகச் சின்னப் பையன்! அரைக்கால் சட்டையைப் போட்டுக் கொண்டும் அங்கும், இங்கும் உலாத்திக் கொண்டு எதுவும் தெரியாத சிறுபையனாக இருந்த நேரம்! அறிஞராக வந்தார்—அண்ணாவானார்!

"என்னுடைய அண்ணன் புகழ் படைத்தவன்! தமிழ் மக்களின் நம்பிக்கையை பெற்றவன்! மக்கள் சக்தியைப் பெற்றவன்" என்ற நிலை பிறந்தது! நானும் வளர்ந்தேன்! அண்ணாவின் காரியங்களுக்கு சிறு சிறு உதவியை செய்துவந்தேன! மேலும் வளர்ந்தேன்!

இந்த அற்புத சக்தி படைத்த மேதையை நான் என்ன சொல்லி பாராட்டுவேன்! இந்த மகா புருஷரை எந்த வார்த்தைகளைக் கொண்டு பாராட்டுவேன்!

எனது அண்ணன் ஏதோ இனம் தெரியாத இன்பத்தைக் காட்டினார்! அவர் காட்டிய வழியிலே நான் ஈடுபட்டேன்! திக்கு தெரியாது, திசை மாறிய கப்பலைப் போல் திணறிக் கொண்டிருந்த எனக்கு நல்வழி காட்டிய அந்த உத்தம குணம் படைத்த மேதையை நான் எவ்வாறு பாராட்டுவேன்!

அண்ணா மேடை ஏறிப்பேசும் போதெல்லாம் நானும் சற்று உற்று உற்று தான் பார்க்கிறேன்! அவருடைய பாணியே ஒரு தனி பாணியாக இருப்பதைக் கண்டு வியப்படைகிறேன்! அடுத்த கணமே பெருமையால் சற்று கனத்து—"இந்த பாக்கியம் நமக்குத்தவிரவேறுயாருக்கு தான் கிட்டும்" என்று பூரிப்பும் கொள்ளுகிறேன்!

நமது அண்ணனுக்கு நாம் இப்போது பொன் விழாக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்! இதைப் பார்த்து சிலர் கேலி செய்துக் கொண்டிருக்கலாம்! இது வரை எவருமே ஒரு தனிப்பட்ட ஆளுக்கு பொன் விழா கொண்டாடியதில்லை! 50 ஆண்டு நிறைவு விழாவை எவருமே பொன் விழா என்று அழைக்க மாட்டார்கள்! "ஒரு ஸ்தாபனத்திற்கு தானே பொன் விழா கொண்டாடுவார்கள்—இவர்களுக்கேன் தமிழ் தடுமாறிப் போகிறது" என்று பலர் கிண்டலும், நையாண்டியும் செய்வார்கள்! அண்ணா ஒரு தனிப்பட்ட ஆள் அல்ல! அவர் ஒரு ஸ்தாபனம்! அண்ணா ஒருவருக்கு மட்டுமே சொந்த மானவரல்ல! அனைவருக்கும் பொதுவானவர் என்பதை அவர்கள் உணராத காரணத்தால் இப்படிக் கூறலாம்!

இன்று திராவிடர் பிரிவினை வாரமும் கொண்டாடுகிறோம்! தி, மு, க,வின் பத்தாண்டு துவக்க விழாவையும் கொண்டாடுகிறோம்! பெரியார் பிறந்த நாளும் இன்று தான்!

பெரியார் அவர்களால் ஏற்பட்ட சில பழுது காரணமாக நாம் பிரிந்தோம்! நாம் அன்றைய தினம் தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்த நேரத்தில் அண்ணா நமக்கெல்லாம் நல்லதோர் முடிவைக் காட்டினார்கள்! நாமெல்லாம் இன்று தலை நிமிர்ந்து நிற்கவும் செய்துள்ளார்!

அண்ணாவைப் பற்றி குறிப்பாக நாம் சொல்ல வேண்டுமானால் இவ்வளவு பெரிய காரியத்தை அவர் எப்படி சாதித்தார் என்பது நமக்கு பெரும் வியப்பாகவே இருக்கிறது! அண்ணாவைப் பற்றி நாம் அவ்வளவு சுலபமாக புரிந்து கொள்வதற்கு இன்னும் சரியான பக்குவத்தை அடையவில்லை என்று தான் நினைக்க வேண்டி இருக்கிறது!

அண்ணா எப்போதுமே அதிருப்தியோடு தான் இருப்பார்! தான் எடுத்த காரியம் முடியவில்லையே என்று அவர் அதிருப்தி கொண்டிருப்பார்! "தான் எடுத்துக் கொண்டிருக்கும் பெரிய காரியம் முடியவில்லையே என்று நினைத்து அதற்கென்ன செய்திருக்கிறோம் என்று நினைத்து" அவர் அதிருப்தியாக இருக்கும் போது அவருடைய பார்வையே ஒரு தனி விதமாக இருக்கும்! அந்தப் பார்வையில் தான் எவ்வளவு பொருள் அடங்கி இருக்கும்!

சில பல நேரங்களிலே சலிப்பு வந்தவர் போல் பேசுவார்! அந்த நேரத்தில் "என்ன இவருக்கு அதற்குள் சலிப்பு ஏற்பட்டு விட்டதே" என்று தான் பலர் நினைப்பார்கள்! அது உண்மையல்ல! அவருக்கு எப்போதுமே சலிப்பு என்பது மட்டும் ஏற்பட்டதே கிடையாது! சலித்துக் கொள்வதைப் போல் சலித்துக் கொண்டு நண்பர்களிடமிருந்து பல சாதனைகளை சாதித்துக் கொண்டு விடுவார்!

அண்ணாவைப் பற்றி ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தால் நமக்கே வியப்பாக இருக்கும்! சில பல நேரங்களில் நாம் ஆச்சரியம் கூடப்பட வேண்டி இருக்கும்!

"சம்பத்து நீ என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்! நம்முடைய வாழ்நாளில் பெரும் பகுதி கழிந்து கொண்டே போகிறது! நாம் இதுவரை என்ன காரியங்களை சாதித்து விட்டோம் என்று எண்ணுகிறாய்! 32 வயது நிரம்பாத இளைஞன் அவுங்சான் பர்மியர்களுக்குத் தலைவராகி, பர்மிய நாட்டை விடுவித்து, அந்த நாட்டிற்கே அமைச்சராகி எதிரிகளின் கையால் சுட்டுக் கொல்லப்பட்டான்! நாமும்தான் ஒதிய மரம் போல் வளர்ந்து கொண்டு வருகிறோம்! சம்பத்து! இதைப் பற்றியெல்லாம் நீ என்ன எண்ணிக் கொண்டிருக்கிறாய்" என்று அவர் கூறும் போது இது போன்ற விந்தைக் குரிய மனிதரை நாம் எங்கே தேடிச் சென்றாலும் காண முடியாது என்று தான் எண்ணுவேன்!

இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியைக் கண்டு சிலர் பொறாமைப்படுகிறார்கள்! பத்தாண்டு காலத்தில் நாம் பெற்றிருக்கிற மகத்தான சக்தியாகும்!

இந்தப் பெரும் பட்டணத்து நெடுஞ்சாலைகளையெல்லாம் கடந்து, தொலைவுகளிலிருந்து பறந்து வந்து—இந்த இரவு நேரத்தில்—தங்கள் பெண்டு பிள்ளைகளையும் மறந்து ஏன் இங்கு உட்கார்ந்திருக்கிறீர்கள்! எப்படிகிடைத்தது இந்த ஜீவ சக்தி! அந்தப் பக்கத்தையும் பார்க்கிறேன் இந்தப் பக்கத்தில் உள்ள தாய்மார்களையும் பார்க்கிறேன்! சரியான மன உறுதி படைத்த இளைஞர்களையும் காண்கிறேன்! பழுத்து முதிர்ந்த கிழங்களையும் பார்க்கிறேன்! ஆச்சரியப்படுகிறேன்! இந்த நம்பிக்கை உங்களுக்கு எங்கிருந்து வந்தது!

நாம் போட்ட அஸ்திவாரத்தை தூள் தூளாக்க சிலர் எண்ணுகின்றனர்! இது வெறும் மண் கோட்டையல்ல!

ஆந்திரம் தனி மாகாணமாகி விட்டது, கேரளம் தனி மாநிலமாகப்பிரிந்தது, கன்னடம் போய் விட்டது! இப்படி எல்லா மாநிலங்களும் பிரிந்த பின்பு திராவிடம் எப்படிக் கிடைக்கும் என்று எண்ணுகிறார்கள்! ஆனால் அண்ணா அவர்கள் மட்டும் அசையாத நம்பிக்கையை வைத்திருக்கிறார்!

(8–ம் பக்கம் பார்க்க)

நம்மை சிந்திக்க வைத்தவர், சிரிக்க வைத்தவர், மகிழ வைத்தவர்!

அண்ணு மூன்றெழுத்து மோகனச் சொல்!

அது நம்மை யெல்லாம் இழுக்கும் காந்தச் சொல்!

அறிஞர் அண்ணுவுக்கு கலைஞர் கருணாநிதி சூட்டும் புகழாரம்!

"இன்றைய தினம் நமது அருமை அண்ணன் பிறந்த நாளை பூரிப்போடும், உள்ள மகிழ்வோடும் கொண்டாடி புதுப்பலத்தைப் பெறுகிறோம்" என்று இங்கு பேசிய கழக முன்னணி வீரர்களெல்லாம் குறிப்பிட்டார்கள்!

சிரித்து மகிழவும், சிந்தை களிக்கவும், கேட்போர் உள்ளம் பொங்கவும் நம்மிடையே வீற்றிருக்கும் நமது அண்ணன் பிறந்த நாள் செப்டம்பர் 15-ம் நாள்! நாம் இரண்டு நாள் கழித்து அண்ணு பிறந்த நாளை கொண்டாடுகிறோம்! செப்டம்பர் 17-ம் நாள் கொண்டாடுகிறோம்! விட்ட குறை தொட்ட குறை காரணமாக அல்ல! பெரிய உள்ளத்தோடு நாம் பெரியாரின் பிறந்த நாளன்றே நமது அண்ணுவின் பொன்விழாவையும் கொண்டாடுகிறோம்! பெரியாரால் விரட்டப் பட்டோம், வேதனையோடு வெளியே வந்தோம்! நாம் அடிக்கடி கூறுவதுபோல் துண்டை உதரி தோளில் போட்டுக் கொண்டே வந்தோம்! சொல்லின் செல்வர் சம்பத் கூறியது போல நாம் அதிசயப்படத்தக்க அளவு வளர்ந்து இன்று தி.மு.க வின் பத்தாவது ஆண்டுவிழாவையும் கொண்டாடுகிறோம்! நமது அண்ணனுடைய பொன் விழாவையும் கொண்டாடுகிறோம்!

நாம் மட்டுமல்ல மாற்றார்களும் நமது அண்ணுவின் மதிப்பை, பெருமையை உணர்ந்து அவருடைய அற்புதசக்திகளை பாராட்டுகிறார்கள்!

அமைச்சர் பக்தவத்சலம் சொல்லுகிறார்— "அண்ணுவுக்கு ஐம்பது வயது ஆகிவிட்டது என்பதை, அவரை நேரில் காணுநவர்கள் ஆச்சரியப்படுவார்கள்" என்று கூறுகிறார்! நமது அண்ணுவின் சொல்லில், எழுத்தில் அத்தனை சக்தி இருக்கிறது என்பதை அவரே உணர்ந்திருக்கிறார்.

"முரசொலி" மலருக்கு தந்த வாழ்த்துரையில் அவரே கூறுகிறார்—அண்ணுவின் பேச்சை பக்தியோடு கேட்கிறார்கள் என்று. சதாரணமாக கேட்கவில்லையாம் நமது அண்ணுவின் பேச்சை. பக்தியோடு கேட்கிறார்களாம். எத்தனை மணி நேரமாணுலும் காத்திருந்தும் கேட்கிறார்களாம்! பக்தவத்சலம் கூறுகிறார் இப்படி.

இந்த அளவு மாற்றார்களாலும் போற்றப்படும் நம் ஒப்பற்ற தலைவரின் பொன் விழாவைக்கொண்டாடி பெருமைப்படுகிறோம், பூரிப்படைகிறோம்!

நமது அறிஞர் அண்ணு அரசியலிலே செய்த பெரும்புரட்சியையும்—அதனுல் இளைஞர் சமுதாயம் வீறுகொண்டுள்ள காட்சியையும் நாம் காண்கின்ற நேரத்தில் உள்ளபடியே நாம் பூரிப்படைகிறோம், நமது அண்ணுவின் பேச்சிலே எத்தனை சக்தி இருக்கிறது என்பதை நாம் சொல்லி சொல்லி மகிழத்தான் வேண்டி இருக்கிறது

திருவள்ளுவர் கூறுகிறார்:

கேட்டார்ப் பிணிக்குந்
தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்

நல்ல வார்த்தைகளை, வகைப் படுத்தி அழகு படுத்தி சொல்லுவதே சொல்!

ஆனுல்நம்மைப்பார்த்துஎன்ன சொல்லுகிறார்கள். நாவலர் நெடுஞ்செழியன் ஏன் நெட்டையாக இருக்கிறார், சம்பத் ஏன் கம்பீரமாகப்பேசுகிறார், அண்ணுதுரை ஏன் குள்ளமாக இருக்கிறார் என்று கேலி மொழிகிறார்கள்,

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சியத்தைப்பற்றி சொல்லாமல், அண்ணுவின் ஆற்றலைப்பற்றி கூறாமல், இவர் ஏன் நெட்டை, அவர் ஏன் குள்ளம் என்று கூறுகிறார்கள்.

இதற்கு தான் வள்ளுவர் பெருந்தகை கூறுகிறார் – "உருவு கண்டு எள்ளாமை வேண்டும்" என்று!

உருவத்தைக் கண்டு பழிக்காதே. உருவத்தில் ஒன்றுமில்லை என்று கூறுகிறார்.

உருவுகண் டெள்ளாமை
வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னு ருடைத்து.

உருண்டு செல்லுகிற அழகான பெருந் தேர் உருவத்தில் பெரிது தான் - ஆனுல் அதை உருட்டி செலுத்துகிற அச்சாணி உருவில் சிறிதுதான். இதனுல் உருவைக் கண்டு எள்ளி நகையாடுவதில் என்ன பயன் என்று கேட்கிறார் வள்ளுவர்.

வள்ளுவர் இன்றிருந்திருந்தால்—

"உருவுகண் டெள்ளாமை
வேண்டுமுருள் பெருந்தேர்க்
கச்சாணி அண்ணு உடைத்து"

என்றுதான்—யன்னு ருடைத்து என்பதற்குப் பதில் "அண்ணுருடைத்து" என்றுதான் எழுதி இருப்பார்.

சொல்லுகிற வார்த்தையை உறுதியோடு சொல்லவேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார்,

சொலல்வல்லன் சோர்வில
னஞ்சா னவனை
இகல்வெல்லல் யார்க்கு மரிது.

இதையே வள்ளுவர் அண்ணுவைக் கண்டிருந்தால், அண்ணுவின் ஆற்றலைத் தெரிந்து, சொல் வன்மையை அறிந்து

"சொலல்வல்லான் சோர்விலா அண்ணு" என்றுதான் எழுதி இருப்பார்!

1952-ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற தி. மு க, மாநில மாநாட்டிற்கு தலைவரை வழி மொழியும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அப்போது நான் சொன்னதையே இப்போதும் சொல்ல விரும்புகிறேன்.

அண்ணு ஒரு மோகனமான மூன்று எழுத்தைக்கொண்டது. அண்ணுவுக்கு மூன்று எழுத்து. பணம் மூன்று எழுத்து. —அது தருகின்ற சுகம் மூன்று எழுத்து. குணம் மூன்றுஎழுத்து. அன்பு மூன்று எழுத்து. அது தருகிற காதல் மூன்று எழுத்து. பின்னர் கிடைக்கின்ற களம் மூன்று எழுத்து. களத்திலே கிடைக்கின்ற வெற்றி மூன்று எழுத்து அண்ணுவும் மூன்று எழுத்து.

ஆங்கிலத்தில் ANNA என்று படித்துப் பாருங்கள். அது எப்படிப் படித்தாலும் அண்ணு என்றுதான் படிக்க வேண்டும். இது போல் அண்ணு புது உள்ளம் படைத்தவர். அவருக்கு ஈடு அவர்தான்!

நமக்கெல்லாம்சேனுநாயகராக அண்ணு விளங்குகிறார். திராவிடத்தின் விடுதலைக்கு போர் படை திரட்டி நல்ல நாதம் எழுப்ப வேண்டும். நமது இதய கீதம் எங்கும் கேட்க வேண்டும் என்று சொல்லி — அருமை அண்ணுவின் பொன் விழாவில் உறுதி கொள்வோமாக!

நமக்கிருக்கிற ஆசையெல்லாம் ஒன்றே ஒன்றுதான். திராவிடத்தின் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு—அங்கே அதிகார வெறி பிடித்தவர்களால் எறியப்பட்ட வேல் நம் இதயத்திலே பாய்ந்து துடிதுடித்துக் கொண்டிருக்கிறநேரத்தில் நமது அண்ணு வந்து - "தம்பி! தம்பி! நீ ஏன் தேம்பிக் கொண்டிருக்கிருய்! பிழைத்துக் கொள்வாய், கவலைப் படாதே" என்று கூறும் போது - "நான் செத்தால் கூட பரவாயுல்லை அண்ணு – அதைப் பற்றி நான் கவலைப்பட மாட்டேன் – எனக்கு திராவிட நாடு கிடைத்தாலே போதும்" என்று கூறுவதுதான், அந்த பாக்கியத்தை அடைவதுதான் எனக்கு பெரும் பேறு. இந்த நிலையை ஆக்கித் தாருங்கள் என்று அண்ணுவின் பொன்விழா நேரத்தில் கூறி

அண்ணு வாழ்க!
தமிழைப் போல வாழ்க!
என்று முடிக்கிறேன்.

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

காஞ்சியில் படித்து, பச்சையப்பன் கல்லூரியில் பட்டம் பெற்றார். சிறு வயதிலிருந்தே சமுதாயச்சீர்திருத்த காரியங்களை செய்து வந்திருக்கிறார்!

அவர் வேறு கட்சியில் இருந்தாலும்—"தமிழ் நாடு, தமிழ் மக்கள், தமிழ் மொழி, தமிழில் பேசவேண்டும்" என்ற நோக்கத்திற்கு நான் விரோதியல்ல!

அண்ணு அவர்கள் எதிர்க் கட்சிக்காரராய் இருந்தாலும் அவர் செய்து வரும் சேவையை நான் மறக்கமுடியாது! அண்ணு அவர்கள் ஒரு சமயம் சிறுவயதில் ஆங்கிலத்தில் பேசி வந்ததாகச் சொன்னார்கள்! அவர் ஆங்கிலத்தில் பேசுவதை விட தமிழில் பேசுவது தான் நல்லது. அந்த காலத்தில் சத்தியமூர்த்தி, கல்யாணசுந்தர முதலியார் போன்றவர்கள் தமிழில் தான் பேசிவந்தார்கள்!

அண்ணுவைப் போல் யாருமே தமிழில் பேச முடியாது! கருத்தோடு அழகாகவும் பேசுகிறார். சட்ட சபைக்கு சில வேலைகள் காரணமாக சிலநேரங்களில் வர முடியாமல் போய்விடும்- ஆனுல் அண்ணு அவர்கள் சட்டசபையில் பேசுகிறார்கள் என்ருல் எல்லா வேலைகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு வந்துவிடுவேன். நான் மட்டுமல்ல எல்லோருமே அப்படித்தான்!

அண்ணுவின் பேச்சை சட்ட சபை அதிபர்களும், அமைச்சர்களும், பியூன்களும் விரும்பிக் கேட்கின்றனர்! அன்று சட்ட சபையில் ஒரு வேலையும் நடக்காது! சட்ட சபையில் வேலை செய்பவர்களெல்லாம் அண்ணுவின் பேச்சைக் கேட்க வந்து விடுகின்றனர்!

அண்ணு அவர்கள் ஒரு நல்ல பேச்சாளி, ஒரு நல்ல எழுத்தாளர்! அதுமட்டுமல்ல நல்ல நடிகர்! பல துறையிலும் பயிற்சி பெற்ற பெரிய மனிதர்!

அண்ணு அவர்கள் சட்ட சபைக்கு வந்தவுடன் நான் பயந்து போய் விட்டேன்! "நான் காங்கிரஸ்காரனுயிற்றே — ஒருவேளை என் பேச்சுக்கு மதிப்புத் தரவிட்டால் என்ன செய்வது" என்றெல்லாம் அச்சப்பட்டேன்! அந்த பயம் எல்லாம் பறந்தோடி விட்டது! சட்ட சபையில் சபாநாயகருக்கு மதிப்புக் கொடுத்து, சபாநாயகருக்குக் கட்டுப்பட்டு நடப்பவர் ஒருவர் உண்டு என்ருல் அது அண்ணு அவர்கள் தான்!

12-ம் பக்கம் பார்க்க

தீண்டாமையை ஒழித்த வீரர் !

என். வி. நடராசன்

நமது குடும்பத்தின் தலைவர், அறிஞர் அண்ணா அவர்களுக்கு இன்று 50-வது பிறந்த தினவிழாவையும்—நமது திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கப்பட்ட பத்தாவது ஆண்டு விழாவையும் மிகச் சிறப்போடு கொண்டாடுகிறோம்.

நாட்டுக்கு அவர் நல்ல தொண்டினைச் செய்தார் என்பதைவிட நாட்டில் நல்ல நாகரீகத்தையும், அரசியல் துறையில் உயரிய பண்பாட்டையும் ஏற்படுத்தியவர்— திராவிடத்தின் விடிவெள்ளி நமது அண்ணா தான் என்று சொல்லுவதே மிகப் பொருத்தமானதாகும்!

1934-ம் ஆண்டு முதன் முதலில் நான் அண்ணாவை சந்தித்ததாக எனக்குநினைவு! அப்போது நான் காங்கிரஸ் தொண்டன். நான் காங்கிரஸ் கட்சியில் ஒரு தீவிர தொண்டனாகப் பணிபுரிந்து வந்தபோதிலும் அண்ணாவிடம் அன்பும், நல்ல மரியாதையையும் வைத்திருந்தேன். எந்தத் தலைவரிடத்திலும் வைக்காத மரியாதையை அண்ணாவிடம் வைத்திருந்தேன் என்று கூடச் சொல்லலாம். அதுபோலவே இன்றும் நம் அண்ணாவை மதித்து அவருடன் பணிபுரிந்து வருகிறேன்.

இப்போது நமது அண்ணாவுக்கு பொன் விழா நடைபெறுகிறது! அவரது மணி விழா சுதந்திர திராவிடத்தில் நடைபெற வேண்டும்! அதற்கான பணிகளை நாம் மேற்கொள்ள இன்றே உறுதியையும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

முன்பெல்லாம் பட்டிதொட்டி எங்கும் காந்தி, காங்கிரஸ் என்பது தான் மக்களுக்குத் தாரக மந்திரமாக இருந்தது! இன்று பட்டி, தொட்டி எங்கும், மக்கள் இதயமெங்கும், நல்லவர்கள் உள்ளமெங்கும் "அண்ணா தி. மு க. என்பது தான் தாரக மந்திரமாக இருக்கிறது. இது நமது கழகத்தின் வளர்ச்சியை எடுத்துக் காட்டுகிறது!

தீண்டாமையை ஒழிக்கப்பாடுபட்டது காங்கிரஸ்காரர்கள் தான் என்று பலர் நினைக்கலாம்! நான் சொல்லுவேன் காங்கிரஸ்காரர்களுக்கே அண்ணா தான் தீண்டாமையை ஒழிக்கும் எண்ணத்தையே ஊட்டினார்!

அறிஞர் அண்ணா சென்னை நகரசபைக்கு நடைபெற்ற தேர்தலில் பெத்து நாயக்கன் பேட்டையில் நீதிக் கட்சியின் சார்பில் அப்போது போட்டியிட்டார்!

நாங்கள் மக்களிடம் ஓட்டு கேட்க போவதற்கு முன்பே அண்ணா சென்று விடுவார்!

ஒரு நாள் ஒருசேரி மக்களிடத்தில்— 'எனக்குப் பிறகு உங்களிடம் காங்கிரஸ்காரர்கள் வருவார்கள்! அவர்கள் வந்தால்— "பாரதத்தாயின் புதல்வர்கள் என்று சொல்லுகிறீர்களே! எல்லோரும் ஒரு தாய் வயிற்றின் பிள்ளைகள் என்று சொல்லுகிறீர்களே, ஜாதியில்லை, இனபேதமில்லை என்பது உண்மையானால் எங்கள் வீட்டில் சாப்பிட்டுப் போங்கள்' என்று காங்கிரஸ்காரர்களிடம் கூறுங்கள்! என அந்த மக்களிடம் அண்ணா சொல்லி விட்டுப் போய் விட்டார்!

பிறகு நாங்கள் அந்த சேரிக்கு போய் ஓட்டு கேட்டோம்! கோபாலரெத்தினம், சீனுவாச ஐயர் முதலியோருடன் நானும் போயிருந்தேன்! அவர்கள் எங்களிடம் என்ன கூறினார்கள் தெரியுமா? அண்ணா, அவர்களுக்குச்சொல்லி கொடுத்ததை எங்களிடம் சொன்னார்கள்! "உங்களுக்கு ஓட்டுபோடுவது பிறகு பார்க்கலாம், உண்மையில் உங்களுக்கு ஜாதி பேதமில்லை என்றால் இதைச் சாப்பிடுங்கள்" என்று கூறி மீன் குழம்பு சாதத்தைக் கொடுத்தார்கள். சீனுவாசய்யருக்கு ஒன்றுமே புரியவில்லை— விழித்தார்! அவரைப் பார்க்க பரிதாபமாக இருந்தது! பிறகு அந்த மக்களைப் பார்த்து—"நாங்கள் மீன் குழம்பு சாதம் சாப்பிட மாட்டோம். வேறு ஒரு நாள் வருகிறோம், அப்போது சைவ உணவைக் கொடுங்கள், சாப்பிடுகிறோம்" என்று சொல்லிவிட்டு திரும்பி வந்து விட்டோம்!

பிறகு, ஒரு நாள் போனோம்— சீனுவாசய்யர் உள்பட எல்லோரும் சேர்ந்து சாப்பிட்டோம்! இந்த சமபந்தி போஜனத்திற்கு யார் காரணம்? நமது அண்ணா தான்!

காங்கிரஸ்காரர்கள் தான் தீண்டாமையை ஒழித்தார்கள், காந்தியார் தான் ஜாதியை ஒழிக்கப்பாடுபட்டார் என்றெல்லாம் இன்றைய காங்கிரஸ் வீரர்கள் பேசி வருகிறார்கள்! ஆனால் அந்த காந்தி சீடர்களின் அயோக்கியத்தனமெல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும். இதை அன்று நடைபெற்ற ஒரு சம்பவத்தின் மூலம் விளக்க விரும்புகிறேன்,

நானும், சில காங்கிரஸ்காரர்களும் ஏ. ஜி. வெங்கடாச்சாரியை சந்திக்க வேண்டிய சந்தர்ப்பம் ஒன்று வந்தது! வெங்கடாச்சாரி வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து பல பிரச்னைகளைப் பற்றி பேசிக் கொண்டிருந்து விட்டு திரும்பி வந்தோம்! அவர் என்ன செய்தார் தெரியுமா? அந்த காந்தி சீடர் என்ன செய்தார் தெரியுமா? நாங்கள் உட்கார்ந்திருந்த இடம் தீட்டுபட்டுவிட்டது என்று கருதி தண்ணீரைக் கொண்டு வந்து தெளித்தார்! இன்றும் குத்துகல் போல வெங்கடாச்சாரியார் இருக்கிறார். வேண்டுமானால் கேட்டுப் பார்க்கலாம்!

இது தான் காங்கிரஸ்காரர்களின் சாதி பேதமற்றத் தன்மையா? இது தான் தீண்டாமை ஒழிப்பா?

நாங்கள் நாட்டுக்கு நல்ல பணிபுரிவதால் தான் மக்களின் சக்தியைப் பெற்றிருக்கிறோம்! நாளுக்கு நாள் வளர்ந்தும் வருகிறோம்!

நமது அண்ணாவின் பொன் விழா நமக்கெல்லாம் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் ஊட்டட்டும்! அந்த ஊக்கமும், உற்சாகமும் வடநாட்டு ஏகாதிபத்தியத்தை விரட்டியடிக்க உதவட்டும்!

கே. ஏ. மதியழகன் - இராசசுந்தரி திருமண விழா

தோழர் கே. ஏ. மதியழகன் கோவை மாவட்டம் ஆனைமலை திரு. ஏ. எஸ். குப்புசாமி அவர்களின் செல்வி ராஜசுந்தரி அவர்களை வாழ்க்கைத் துணைவியாக ஏற்ற மணவிழா 9-9-59-ம் நாள் புதன்கிழமை காலை 10 மணியளவில் ஆனைமலை தேவி டாககீஸில் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. துவக்கத்தில் தோழர் கே. ஏ. முருகேசன் அவர்கள் எல்லோரையும் வரவேற்று, மண விழாவிற்குத் தலைமையேற்று நடத்தித் தருமாறு அண்ணா அவர்களை வேண்டிக் கொண்டார்.

தலைமையேற்று அண்ணா அவர்கள் மணவிழாவினை முடித்து வைத்தார்கள். மணமக்கள் உறுதிமொழி கூறி மலர்மாலை சூட்டிக் கொண்டு, தாலி கட்டிக் கொள்ளாமல், கணையாழிகள் மாற்றிக் கொள்வதன் மூலம் தம்பதிகளாயினர். கூடியிருந்த எண்ணற்றோர் கையொலித்து வாழ்த்தினர்.

பின்னர் சட்ட மன்ற உறுப்பினர்களும், கழக முன்னணி வீரர்களும், மக்கள் சபை உறுப்பினர் ஈ. வி. கே. சம்பத் அவர்களும் வாழ்த்துரை வழங்கினர்.

மணமகன் கே. ஏ. மதியழகன் அவர்கள், தலைமை வகித்த அண்ணா அவர்களுக்கும், வாழ்த்துரை நல்கிய ஆருயிர் நண்பர்களுக்கும் வந்திருந்து சிறப்பித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

மணமக்களுக்கு கழகக் கிளைகள், மன்றங்கள், தனிப்பட்டவர்கள் சார்பில் மலர்மாலைகளும் வாழ்த்து இதழ்களும் விலையுயர்ந்த பரிசுகளும் அளிக்கப்பட்டன.

திருமணத்தில்கலந்து கொள்ள முடியாத நிலைமையிலிருந்த பொதுச்செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் மற்றும் பல்வேறு அரசியல் தலைவர்களும் மணமக்களை வாழ்த்தி தந்திகளும், கடிதங்களும் அனுப்பி இருந்தனர்.

ஐயாயிரத்துக்கு மேற்பட்ட மக்களுக்கு நண்பகல் உணவு அளிக்கப்பட்டது.

நாமும் மணமக்களை வாழ்த்துகிறோம்—நீண்ட நெடுங்காலம் வாழ்ந்து நாட்டுக்கு நல்ல பணியினை புரிய வேண்டுகிறோம்,

கத்தியைத் தீட்டாதே!

பொன்னம்பலனார்

இன்று நாமெல்லாம் நமது அறிஞர் அண்ணா அவர்களின் பொன் விழாவையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பத்தாவது ஆண்டு விழாவையும் பெருமையோடும், பூரிப்போடும் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்!

அறிஞர் அண்ணாவின் பேச்சும் எழுத்தும், சிந்தனை சக்தியும், ஆற்றலும், அறிவும், திறனும், எவருக்கும் ஆணித்தரமாகப் பதில் சொல்லும் வன்மையும் பெற்றிருப்பதாலேயே அவரை நாம் அறிஞர் என்று அழைக்கிறோம், தலைவர் என்று அழைக்கிறோம்!

ஒருவர் கத்தியைத் தீட்டச் சொல்லுகிறார்! 'தம்பி! கத்தியைத் தீட்டாதே! முதலில் உன் புத்தியைத் தீட்டு'' என்று ஒருவர் சொல்லுகிறார்!

''கத்தியைத் தீட்டினால் பயன் கிடைக்காது, பலன் கிடைக்காது—கத்தியைத் தீட்டுவதற்கு முன்பு உன் புத்தியைத் தீட்டு'' என்று சொன்னவர் நமது அண்ணா! இவர் அறிஞரா? அவரா?

ஒருவர் பிள்ளையாரை உடைக்கச் சொல்கிறார்! ''தம்பி பிள்ளையாரையும் உடைக்காதே—அதற்குத் தேங்காயும் உடைக்காதே'' என்று ஒருவர் சொல்லுகிறார்! இதில் யார் அறிஞர்!

''என் கட்சி, என் வீடு, என் சொத்து — என் இஷ்டப்படித் தான் செய்வேன்'' என்று பேசிடும் தலைவர் அல்ல நமது அண்ணா!

'திராவிட முன்னேற்றக் கழகம் உங்கள் கட்சி, அது உங்கள் சொத்து, உங்கள் வீடு'' என்று சொல்லுபவர் தான் நமது அறிஞர் அண்ணா!

''எனக்கிருக்கிற உரிமை உங்கள் எல்லோருக்கும் உண்டு! நெடுஞ்செழியனுக்கு உண்டு, சம்பத்துக்கு உண்டு, கலைஞர் கருணாநிதிக்கு உண்டு, மதியழகனுக்கு உண்டு, நடராஜனுக்கு உண்டு, கே.ஆர். இராமசாமிக்கு உண்டு—இங்கு பேசிக்கொண்டிருக்கிற பொன்னம்பலத்திற்கும் உண்டு'' என்று சொல்லிவரும் பெருங்குணம் படைத்த தலைவர் தான் நமது அறிஞர் அண்ணா!

கொள்கைக் குழப்பம் ஏற்பட்ட நேரத்திலே, பெருந்தன்மையோடு, கண்ணியத்தோடு, கடமையோடு, கட்டுப்பாட்டை மறவாமல், நிலை குலையாமல் மக்களுக்கு நல்ல வழி காட்டியாய் அறவழி காட்டியாய். அன்புவழி காட்டியாய் பணிபுரிய வந்த பெருந்தகையாளர் தான் நமது அண்ணா!

இன்று எல்லோரும் நமது அண்ணாவிற்த பொன் விழா கொண்டாடுகிறோம்! அண்ணாவை அழைத்து வந்து பொது வாழ்வில் ஈடுபட வைத்த இந்த பொன்னம்பலம் இதைக் கண்டு பூரிப்படைகிறான்!

''வளருமா? வாழ்வார்களா'' என்று ஏசித் திரிந்தவர்களெல்லாம் பெருமைப்படுகிற அளவுக்கு அண்ணாமலை தீபம் போல் நமது அண்ணா காட்சியளிக்கிறார்!

ஜனாப் ஜின்னா பாகிஸ்தான் கேட்பதற்த முன்பு நமது அண்ணா திராவிட நாடு கேட்டார்! நமது அண்ணா திராவிட நாடு கேட்ட போது—ஜனாப் ஜின்னா பாகிஸ்தான் கேட்கவில்லை! அவர் பாகிஸ்தானைப் பிரித்த பிறகே இதந்தார்!

நாம் இன்னும் திராவிட நாடு பெறாததற்கு காரணம் — நமக்குள்ளே இருக்கும் ஜாதியாலே, சமயத்தாலே, சாஸ்திரத்தாலே, மூடப் பழக்க வழக்கங்களாலே தான்! இஸ்லாமியர்கள் என்றால் எல்லோரும் ஒன்று பட்டார்கள்! ஜின்னா சாகிப் சொன்ன சொல்லுக்கு, இட்ட கட்டளைக்கு எல்லோரும் கட்டுப்பட்டு பாடுபட்டார்கள்!

நம் கழகம் எங்கெங்கு இருக்கிறதோ அங்கெல்லாம் நம் அண்ணா இருக்கிறார்! எங்கே முரசு முழங்குகிறதோ அங்கெல்லாம் நமது அண்ணா தெரிகிறார்! நமக்குப் படை இருந்தும், பட்டாளம் இருந்தும் இந்த பத்தாண்டு காலமாக பெரும்பணி புரிந்தும், நாம் ஏன் இன்னும் திராவிட நாட்டைப் பெறவில்லை! அதன் உட்கருத்தென்ன! அன்பு குறையாமல், அறிவு அழியாமல், சுயமரியாதையை இழக்காமல்—கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற அறவழியில் நடப்போம்!

பொதுவாழ்வு என்றால் பொன்னாடை மட்டும் போர்த்த மாட்டார்கள், 61 பவுன்களை மட்டும் வழங்கமாட்டார்கள்! நஞ்சு கொடுப்பார்கள், விஷம் கொடுப்பார்கள், சிறைச்சாலை அழைக்கும், அடக்குமுறை வரலாம், அவைகளையெல்லாம் தாங்கிக் கொள்ள இதயம் வேண்டுமடா தம்பி'' என்று சொன்னவர் நமது அண்ணா!

ஜின்னா சொன்னார்—''பாகிஸ்தானைப் பிரித்த பின்பே சாவேன்'' என்று! இஸ்லாமிய கொடியை பறக்கவிட்ட பின்பே செத்தார்! ஜின்னா எப்படிப் பெற்றாரோ அதேபோல் நாமும் ஜாதியை மறந்து, சாஸ்திரத்தை மறந்து எல்லோரும் ஒன்றுபட்டு திராவிட நாட்டை பெற்றே தீருவோம் என்று இந்த நாளில் உறுதி கொள்ளுங்கள்!

அண்ணா வாழ்க!

திராவிடநாடு திராவிடருக்கே!
(சென்னை, திருவல்லிக்கேணி கடற்கரையில் பொன்னம்பலனார்)

(5-ம்பக்கத் தொடர்ச்சி)

திராவிட நாடு ஒரு போதும் கிடைக்காது! இது வெறும் கனவு என்று சொல்லுகிறார்களாம்!

இப்படிக் கூறித் திரிபவர்களுக்கு அண்ணா சரியான முறையில், எல்லோரும் வியக்கத் தக்க வகையில் பதில் சொல்லி இருக்கிறார்!

நாங்கள் கனவு தான் காண்கிறோம்! காண்கிற கனவு நல்ல கனவாகத்தான் இருக்கட்டுமே, கொஞ்சம் பெரிதாகத் தான் காண்போமே என்று சொல்லி இருக்கிறார்!

இன்று உலகத்தில் நிகழ்ந்திருக்கிற பெரும் பெரும் சாதனைகள் எல்லாம் கனவு கண்டு கண்டு தான் ஏற்பட்டிருக்கின்றன! பல விஞ்ஞானிகள் கனவு கண்டு கண்டு தான் பெரும் சாதனைகளை யெல்லாம் சாதித்திருக்கின்றார்கள்! சில பேர்களுக்குத் தேவைப்படுகின்ற கனவு போல் நாங்கள் கனவு காணவில்லை! குதிரை பந்தய சூதாட்ட மனோபாவத்தில் நாங்கள் கனவு காணவில்லை!

அரசியலிலே எத்தனையோ ரகங்கள் உண்டு! அதிலே சிலர் அரசியல் அவசரக்காரர்களாக மாறி இருக்கிறார்கள்! அவர்கள் அவசரப் படலாம்! நமக்கு நம் மீது நம்பிக்கை இருக்கிறது! நமக்கு ஆயுள் நீண்டிருக்கிறது! நாம் அவசரப்பட வேண்டிய அவசியத்தில் இல்லை!

மற்ற மூன்று மாநிலங்களையும் நம்பி நாம் ஈடுபட்டிருக்கிற இலட்சிய பாதையை அடைய வேண்டும்!

50 வயதை முடித்து புது முறுக்கோடு இருக்கிற நமது அண்ணா இலட்சியத்தை ஈடேற்றித் தருவார்!

இனி சில பிரச்சினைகளை நாம் போக்கிக் கொள்ளலாம் என்றே நினைக்கிறோம்! இத்தனை நாளாக சின்னப் பையன்கள், விளையாட்டுப் பையன்கள், சிறுவர்கள் என்று கூறி வந்த நிலை இன்றோடு போய் விடும் என்றே நினைக்கிறோம்!

பொன் விழா நடத்துகின்ற இந்த நேரத்தில் நான் அண்ணா அவர்களுக்கு ஓர் வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன்! நாங்கள் உங்களுக்குவாழ்த்துரை வழங்க வேண்டிய வயதைப் பெற்றவர்களல்ல! உங்களிடம் நாங்கள் கோரிக்கையை தான் வைக்கிறோம்!

பொன் விழா நேரத்தில் நாங்கள் உங்களுக்குத் தருவதற்கு எங்கள் கைகளில் ஒன்றுமில்லை! எங்களால் உங்களுக்கு எதைத் தான் தரமுடியும்! நாங்கள் உங்களுக்குத் தருவதெல்லாம் தொல்லைகள் தான்! மன வேதனையைத் தான்! கஷ்டங்களைத் தான்! எங்களால் இதைத் தவிர வேறொன்றும் காணிக்கையாக வைப்பதற்கில்லை! உங்களுடைய அபாரமான திறமையை, உங்களுக்கே சொந்தமான சிந்தனா சக்தியை, நல்ல நம்பிக்கையை எங்களுக்குத் தர வேண்டும்!'' ''அண்ணா! உங்களுடைய முழு நேரத்தையும் எங்களுக்குத் தாருங்கள்! உங்களுடைய முழு சக்தியையும் தாருங்கள்!'' என்ற கோரிக்கையை தெரிவித்து—அதைப் பெற முயற்சிப்போம் என்று கூறி விடைப் பெறுகிறேன்,

(சொல்லின்செல்வர் சம்பத்—சென்னை கடற்கரையில் அண்ணாவின் பொன் விழா பாராட்டுக் கூட்டத்தில் பேசியதின் சுருக்கம்)

அண்ணா

ஒரு தத்துவஞானி

(வி.பி. இராமன்)

இன்று திராவிடர் பிரிவினை வாரமும், திராவிட முன்னேற்றக் கழக 10ம் ஆண்டு துவக்க விழாவும், நமது அறிஞர் அண்ணாவின் பொன் விழா வாரமும் ஒன்றாக இருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை!

முதலில் நமது கண்களுக்கு அண்ணா தெரிகிறார், பிறகு நமது கழகம் தெரிகிறது. அதன் பிறகு நம் நாட்டிற்கு விடுதலையும் தெரிகிறது! அறிஞர் அண்ணாவின் உருவம் எல்லோருடைய உள்ளத்திலேயும் மறையாமல், அழியாமல் ஓர் சித்திரம் போலவே காட்சியளித்துக் கொண்டிருக்கிறது.

நமது அறிஞர் அண்ணாவை சிலர் அரசியல்வாதி என்று சொல்லுவார்கள்! அது முற்றிலும் தவறு! அறிஞர் அண்ணா ஒரு தத்துவ ஞானி! அரசியல்வாதியும் தத்துவ ஞானியும் ஒன்றென்றே பலர் சொல்லக் கூடும்! அதுவும் தவறென்றே சொல்லுவேன்! தத்துவ ஞானிக்கும், அரசியல்வாதிக்கும் எவ்வளவோ வேறுபாடு உண்டு!

அரசியல்வாதி சில நாட்களுக்கு மட்டும்தான் மக்கள் மனதிலே இடம் பெற்றிருப்பான்! தத்துவஞானி அப்படியல்ல!

நீங்களெல்லோரும் ரூசோவை ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருப்பீர்கள்! ரூசோவைப்பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும்! ஆனால் அந்த பிரான்ஸ் நாட்டை ஆண்டு வந்த மன்னனைப் பற்றி—மன்னனுடைய பெயர்கூட சிலருக்குத் தெரியாது!

9-ம் பக்கம் பார்க்க

அறிஞர்கள் போற்றும் அறிஞர் !

எஸ். எஸ். இராஜேந்திரன்

இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற தலைவன், ஒப்பற்ற மேதை, தமிழகத்தின் பாது காவலர் நமது அறிஞர் அண்ணாவுக்கு இப்போது பொன் விழா நடை பெறுகிறது! இதைக் கண்டு நாம் என்றும் அடையாத மகிழ்ச்சியை, இன்பத்தை அடைகிறோம்!

ரஷ்ய நாட்டின் தலைவர் ஸ்டாலின் எப்படி செயல் வீரரோ—இந்தியத் துணைக் கண்டத்தின் பிரதமர் நேரு எப்படி சாமர்த்தியக்காரரோ — சீன நாட்டு மா-சே-துங் எப்படி ஒரு பெரும் புரட்சிக்காரனோ அதுபோல் நமது அண்ணா உலகப் பெருந் தலைவர்களின் வரிசையில் இடம் பெற்ற ஒரு பேரறிஞர்! ஒரு புரட்சிக்காரர்! ஒரு செயல்வீரர்!

நமது அண்ணா தலைவர்களுக்கெல்லாம் தலைவர்!

நமது அண்ணா அறிஞர்களுக்கெல்லாம் அறிஞர்—பேரறிஞர்! அறிஞர்கள் போற்றும் அறிஞர்!

உலகத்திலேயே வேறு யாருக்கும் கிடைக்காத ஒரு அறிஞன், ஒரு மேதை நமக்குக் கிடைத்திருக்கிறார்! வைதீக பாஷையில் கூற வேண்டுமானால் இதை ஒரு பாக்கியம் என்றுதான் சொல்ல வேண்டும்!

எனது அருமை நண்பர் மதியழகன் குறிப்பிட்டதைப்போல் அண்ணா ஒருசிறந்த பேச்சாளர். ஒரு சிறந்த எழுத்தாளர், ஒரு சிறந்தநாடகாசிரியர், ஒரு சிறந்த நடிப்புக் கலைஞர், ஒரு சிறந்த திரைக் கதை ஆசிரியர்!

அண்ணாவின் கலைப்பணியை, அண்ணா கலையுலகத்திற்கு செய்த சேவையை எவருமே மறக்க முடியாது! கலையுலகத்தைவளர்த்தவரே, கலைஞர்களைப் பாராட்டியவரே நமது அண்ணாதான்! அவருடைய பணியால் நாமெல்லாம் தலை நிமிர்ந்து நடை போடுகிறோம்! கலைஞர்களெல்லாம் பெருமையோடும், புகழோடும் வாழ்கிறார்கள்!

பவளக்கொடியும், ஐயப்பன் நாடகமும் நடந்துகொண்டிருந்த நேரத்தில்தான் நாம் பகுத்தறிவு பிரச்சாரத்தை நாடகத்தின் மூலம் துவக்கினோம்! மூடக் கொள்கைகளை நாடகத்தின் மூலம் முறியடிக்கப் புறப்பட்டோம்! 'இவர்களால் முடியுமா' என்று அப்போது கூறினார்கள்! இன்று அண்ணா நாடகத்திற்கு இருக்கிற மதிப்பு வேறு எந்த நாடகத்திற்குமே, வேறு எந்த சினிமாவிற்குமே இல்லை!

கலையின் மூலம் நாட்டுமக்களை விழிப்படையச் செய்தோம்—கலையையும் சீர்திருத்தினோம்!

நமது பெரியார் இராமசாமி அவர்கள்—அண்ணாவின் நாடகத்தைப் பார்த்துவிட்டு — "நாம் ஆயிரம் மாநாடு நடத்துவதும் சரி—இது போன்ற ஒரு நாடகம் நடத்துவதும்சரி" என்றுபுகழ்ந்து பேசி இருக்கிறார்கள்! அந்த அளவிற்கு அண்ணாவின் நாடகத்தில் அறிவுப்பிரச்சாரம்,பகுத்தறிவுக் கொள்கை இருந்தது!

மதிப்பிற்குரிய அண்ணன் கே. ஆர். இராமசாமி கூறியது போல்—சந்திரமோகன் நாடகம் நாட்டிலே எத்தனை எழுச்சியை, புரட்சியை உண்டாக்கி இருக்கிறது என்று எண்ணிப் பார்க்க வேண்டும்! சந்திரமோகன் நாடகத்தில் கே. ஆர். இராமசாமி சந்திரமோகனாகவும், சம்பத்து சிவாஜியாகவும் நடித்துள்ளார்கள்! அந்த நாடகத்தில் "ஆயுதம் தேவையில்லை, அறிவு தான் தேவை" என்று நமது பகுத்தறிவு பிரச்சாரத்தைப் பரப்பி இருக்கிறார்!

வேலைக்காரி படத்தில் ஆனந்தனாக வரும் கே. ஆர். இராமசாமி —"இன்னமும் பாராமுகம் ஏனம்மா" என்று காளியைப் பார்த்துப் பாடி - அந்தக் காளி வரங் கொடுக்காத காரணத்தால் - அந்தக் காளியை மூளியாக்கி விட்ட காட்சியை நாம் என்றுமே மறக்க முடியாது!

அண்ணா தீட்டிய "நல்ல தம்பியில்" கலைவாணர் நல்ல தம்பியாக வந்து நாட்டுக்கு நல்ல சேவைகளை செய்தார்! ஏழை மக்களுக்கு நிலங்களையெல்லாம் தானம் செய்தார்! அதேபோல் கலைவாணரும்,நமது நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமியும் தாங்கள் சம்பாதித்த பெருஞ் செல்வங்களை யெல்லாம் ஏழை மக்களுக்கு ஈந்து, ஈந்து கொடுத்தார்கள்!

அண்ணாவின் பெருந்தன்மையைப் பற்றி, அண்ணாவின் நல்ல உள்ளத்தைப்பற்றி எடுத்துரைக்க ஒரே ஒரு நிகழ்ச்சியை மட்டும் உங்களிடம் சொல்ல விரும்புகிறேன்.

"பராசக்தி" படத்தை தயாரித்த எங்கள் அருமை நண்பர் பி. ஏ. பெருமாள் -- "பராசக்தி படத்தில் கே. ஆர். இராமசாமியை நடிக்கச் சொல்லுங்கள்" என்று நமது அண்ணாவிடம் கூறினார்! பி. ஏ. பெருமாள் அண்ணாவின் யோசனையைக் கேட்காமல் எதையுமே செய்யமாட்டார்கள்! நமது அண்ணா அவர்கள் திரு. பெருமாள் அவர்களிடம்—கே. ஆர். இராமசாமிக்கு இப்போது அதிகமாக வேலை இருக்கிறது, அவர் வேண்டாம் என்று கூறிவிட்டு — வி. சி. கணேசன் (சிவாஜி கணேசன்) என்று ஒருவர் இருக்கிறார், இராஜேந்திரன் என்று ஒருவர் இருக்கிறார் இருவரும் நன்றாக நடிக்கக் கூடியவர்கள்—அவர்களை நடிக்கச்சொல்லுகிறேன் என்றார்!

பி. ஏ. பெருமாள் முதலில் கொஞ்சம் சந்தேகப்பட்டார்கள்! கே. ஆர். இராமசாமியும் மறுக்கவே—பி.ஏ. பெருமாள் எங்கள் இருவரையும்கொண்டு படத்தை எடுத்தார்கள்!

அண்ணா அவர்கள் இதைச் செய்யாவிட்டால் சிவாஜி கணேசனும் வளர்ந்திருக்க முடியாது! நானும் வளர்ந்திருக்க முடியாது!

அறிஞர் அண்ணாவின் நல்ல உள்ளத்தால் வி. சி. கணேசனும் சிவாஜியானார்! நானும் இன்று நாட்டுக்குத் தெரியும்படியானேன்! அண்ணாவுக்கு இருக்கிற நல்ல எண்ணம், பெருந்தன்மை, மற்றவர்கள் மீது இருக்கிற அன்பு, பாசம், வேறு எந்தத் தலைவருக்குமே இருக்க முடியாது, நிச்சயமாக இருக்க முடியாது!

எனவே அந்த நல்ல உள்ளம் படைத்த தலைவரின் ஆசையை நிறைவேற்றி வைப்பதே நமது இலட்சியமாகும்! அவரது ஆசை திராவிடத்தின் விடுதலை ஒன்றேயாகும்! அந்த விடுதலைக்கான பணியை செய்ய ஆயிரக் கணக்கான வீரர்கள் களம் நோக்கிப் புறப்படத் தயாராக இருக்கிறார்கள் என்று கூறி, முடித்துக் கொள்ளுகிறேன்!

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

200 ஆண்டுகளாக ரூசோவின் பெயரை நாம் மனதில் வைத்துக்கொண்டிருக்கிறோம்! ஆனால் அந்த நாட்டு மன்னனுடைய பெயர், செல்வாக்கு எல்லாம் அந்த நாட்டு மக்களிடத்தில் கூட இல்லாமல் அழிந்து போய்விட்டது! காரணம் ரூசோ ஒரு தத்துவ ஞானி—நம் அண்ணாவைப்போல! ரூசோவினுடைய கொள்கை மக்களுக்கேற்ற கொள்கை! மக்களுக்கு வாழ்வளிக்கும் கொள்கை! புனிதமான கொள்கை! அது எந்தக் காலத்திலும் அழியாது!

நமது அறிஞர் அண்ணாவின் கொள்கை அதைவிட சக்தி வாய்ந்த கொள்கையாகும்! அது காலத்தால் அழியாத—என்றும் நிலைத்து நிற்கும் கொள்கையாகும்!

இதுவரையில் திராவிட நாடே இல்லை என்று சொல்லி வந்தவர்கள்—இப்போது எப்போது என்று தான்கேட்க ஆரம்பித்திருக்கிறார்கள்! இதுவரை திராவிட நாடு ஏன் என்று கேட்டவர்கள் — திராவிட நாடு எப்போது வரப்போகிறது என்றுதான் கேட்கிறார்கள்! அடுத்தபடியாக எப்படிவரும் என்றுதான் கேட்கத் தொடங்குவார்கள்!

நமது கனம் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் கூட திராவிட நாட்டு பிரச்னையை ஒரு பத்தாண்டு காலத்திற்கு ஒத்தி போடுங்கள் என்று தான் சொன்னாரே தவிர திராவிட நாடு ஏன் பிரிய வேண்டுமென்றோ, பிரியக் கூடாது என்றோ சொல்லவில்லை!

சென்னை மாநகராட்சியை நாம் கைப்பற்றி விட்டதைக் கண்டு டில்லிக்காரர்கள் நடுங்கியே போய்விட்டார்கள்! திராவிட முன்னேற்றக் கழகம் இனி சட்ட சபையையும் கைப்பற்றி விடுமோ என்று அச்சப்படவும் தொடங்கி விட்டார்கள்.

இங்கே வீற்றிருக்கிற சென்னை மாநகராட்சி மன்றத் தலைவர் அ. பொ. அரசு அன்று வேறு வகையில் தான் காட்சி யளித்தார்!

நேருவின்கறுப்புக்கொடி நிகழ்ச்சியில் பங்கு கொண்டு அவர் சிறைச்சாலைக்குப் போனபோதுள்ள நிகழ்ச்சி தான்என் நினைவுக்கு வருகிறது! எதிரி நம்பர் பதினெட்டாக இருந்தவர் இன்று சென்னைக்குமுதல் நம்பராக இருக்கிறார்!

இதற்கெல்லாம் காரணம் நமது அருமை அண்ணாவின் கண்ணியம், கடமை, கட்டுப்பாடுதான்! அன்று போலீஸ் லத்திசார்ஜ்க்கு ஆளாகிய காரணத்தால்தான் இன்று அ. பொ. அரசு புது பலம் பெற்றிருக்கிறார்! நாமும் போலீஸ்காரர்களை திருப்பி அடித்திருந்தால் இந்த நிலையைப் பெற முடியுமா? அ. பொ. அரசுவின் புஜபலத்தைப் பாருங்கள்! அவரால் திருப்பித் தாக்க முடியாதா? இங்கேதான் நமது அண்ணாவின் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு நமக்கு நல்ல அறிவை போதிக்கிறது!

நாம் வேட்டு முறைகளால் காரியத்தை சாதிக்க முடியாது! ஓட்டு முறைகளால் தான் எதையும் சாதிக்க முடியும்! சட்டசபையில் இன்று நாம் 15 பேராக இருக்கிறோம்! அவர்கள் 150 பேராக இருக்கிறார்கள்! அவர்களுக்குஎதிரே நாம் பதினைந்து பேர் இருக்கிறோம்! அவர்களுக்குப் பின்னாலே 150 பேர்கள் இருக்கிறார்கள்! நம்முடைய எண்ணிக்கை பதினைந்துபேராக இருக்கும் போதே அவர்களுக்கு டானிக் சாப்பிட்டது போல் இருக்கிறது! பதினைந்தாக இருக்கிற எண்ணிக்கை 150 என்று வளர்ந்தால் நிலை குலைந்தே போய் விடுவார்கள்! நகர சபையிலே நாம் 45 பேர்கள்வந்தவுடனேயே டில்லியில் நடுக்கம் ஏற்பட்டு விட்டதென்றால் சட்ட சபையில் 150 பேர் வந்துவிட்டால் டில்லி ஓட்டமே பிடிக்க வேண்டியதுதான்!

நமது அறிஞர் அண்ணாவின் பொன் விழாவில் நாமெல்லாம் கடமையோடும், கண்ணியத்தோடும், கட்டுப்பாட்டோடுபணிபுரிந்துநமது திராவிடநாடு இலட்சியத்தை அடைவோம் என்ற உறுதியை எடுத்துக் கொள்வோமாக!

மாற்றார் போற்றும் நல்லவர்! வேற்றார் புகழ்ந்திடும் பெரியவர்!

8-ம் பக்கத் தொடர்ச்சி

யில் நடத்தலாமா? பிரான்ஸ் புரட்சித் திருநாளில் நடத்தலாமா?" என்றெல்லாம் அண்ணாவைக் கேட்டோம்! அதற்கு அண்ணா அவர்கள் பெரியார் பிறந்த நாளே நாமும் பிறப்போம்—செப்டம்பர் மாதம் 17ம் தேதி பெரியார் பிறந்தார். அந்த நாளிலேயே நமது கழகத்துவக்க விழாவையும் வைத்துக் கொள்ளுவோம்--அப்போதுதான் பெரியாரும் நம் இதயத்திலேயே இருப்பார் என்று கூறினார்.

இந்த பெருந்தன்மை எந்தத் தலைவரிடத்தில் இருக்கும். நமது அண்ணாவைத் தவிர வேறு யாரிடத்திலாவது இந்தப் பெருந்தன்மையைப் பார்க்க முடியுமா?

இப்படிப்பட்ட அரசியல் நாகரிகத்தைக் கற்றுத் தந்தவர் அண்ணா. பெரியாரிடமிருந்து பெரும்பான்மையினர் கருத்து வேறுபட்டுவிட்ட நேரத்தில், மிகச் சிறுபான்மையினரை பெரியாரிடம் விட்டுவிட்டு அண்ணா அவர்கள் பெரும்பான்மையினருடன் வெளியேறினார்கள். சிறுபான்மையினரை வெளியேற்றிவிட்டு பெரும்பான்மையினராக வுள்ளவர்கள் கழகத்தைக் கைப்பற்றிக்கொள்ள விரும்பவில்லை. இத்தகைய அரசியல் கண்ணியத்தை எந்த வரலாற்றிலும் காண முடியாது.

இப்படிப்பட்ட பண்புள்ளவரை, சிறந்த அறிவுடையவரை, ஆற்றல் படைத்தவரை அறிஞர் என்கிறோம். நாம், அண்ணாவை அறிஞர் என்று சொல்லுவது மாற்றார்கள் சிலருக்குப் பிடிக்கவில்லை! "அண்ணாதுரைக்கு யார் அறிஞர் பட்டம் கொடுத்தது" என்று கேட்கிறார்கள்.

யார் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறாய்? எப்படி கொடுக்க வேண்டுமென்று கூறுகிறாய்?

பூ என்றால் தாமரையைத் தான் குறிக்கும்.

தார் வேந்தன் என்றால் சோழனைத்தான் குறிக்கும்.

நாடு என்றால் சோழ நாட்டைத்தான் குறிக்கும்.

நீர் என்றால் காவிரியைத்தான் குறிக்கும்.

அறிஞர் என்றால் அது அண்ணாவைத்தான் குறிக்கும்.

மகாத்மா என்றால் ஒரு மாமனிதர் என்று பொருள் பட்டாலும் அது காந்தியாரைத்தான் குறிக்கும்.

பெரியார் என்றால் அது பெரியார் இராமசாமியைத்தான் குறிக்கும்.

அதுபோல அறிஞர் என்றால் அது நமது அண்ணாவைதான் குறிக்கும்!

"மாற்றாரும் விரும்பிக் கேட்கக்கூடிய வகையில் சொற்பொழிவாற்றக் கூடியவர் நம் அண்ணா. சிறந்த அரசியல் பண்பாடுடையவர் அண்ணா என்பதை மாற்றாரும் ஒப்புக் கொள்கின்றனர். அண்ணா அவர்கள் பேச்சாளர் மட்டுமல்ல — ஈடும் இணையுமற்ற சிறந்த எழுத்தாளர், அறிஞர் அண்ணாபோல்—எழுத-பேசிப் பழகும் ஒரு பட்டாளமே உருவாகிக் கொண்டிருக்கிறது. மாற்றுக் கட்சியினரும் அண்ணாபோல் பேச எழுதப் பழகிப் பார்க்கின்றனர்.

"மேல் நாட்டுப் பேரறிஞர் 'ஹியூம்' என்பவர், 'சிசரோ' என்ற அறிஞர் பற்றிக் குறிப்பிடுகையில், 'எத்தனையோ பேர் எழுதுகிறார்கள்; அவர்கள் எழுதுவதிலே வெறும் லத்தீன் மொழியைத்தான் காண்கிறேன்; ஆனால் சிசரோ எழுத்தில் கிரேக்க நாட்டு மக்களையே காண்கிறேன்'' என்றார். அதைப் போல அண்ணா அவர்களுடைய எழுத்தில் தமிழ் மட்டுமல்ல—தமிழ் மக்களையே காண்கிறோம்: திராவிட நாட்டையே காணகிறோம்.

"அண்ணா அவர்கள் சாதாரணமாக ஒரு துறையில் மட்டுமல்லாமல் எல்லாத் துறையிலும் எழுதக்கூடிய சிறந்த எழுத்தாளர். சில எழுத்தாளருக்குக் கட்டுரை மட்டும் எழுதவரும்-கதை எழுத வராது! சிலருக்குக் கதைவரும்—கட்டுரை எழுத வராது! சிலர் கதை, கட்டுரை எழுதலாம்—நாடகம் எழுத வராது! சிலர் நாடகம் எழுதலாம் — திரைக்கதை வசனம் எழுத முடியாது!

"நமது அண்ணா அவர்களோ இவை அத்தனைத் துறையிலும் எழுதவல்லவர்! ஒரு சிறு கூழாங்கல்லை எடுத்துக்கொடுத்து, 'அது பற்றி எழுதுங்கள்' என்றாலும் ஒரு அழகான கட்டுரை எழுதுவார் அண்ணா! எதைப்பற்றி வேண்டுமானாலும் பார்த்து மலைக்கத்தக்க அளவில் அண்ணா எழுதுவார். கூழாங்கல் முதல் அணுகுண்டுவரை எதைப்பற்றியும் எழுதுவார்—பேசுவார்!

"நாடகம் எழுதக்கூடியவர் பலர் இருக்கலாம்; ஆனால் நம் அண்ணா அவர்களோ, ஒரு காலத்தையே மாற்றியமைக்கக் கூடிய வகையில் கருத்துப் பொதிந்த மறுமலர்ச்சி நாடகங்களை எழுதக் கூடியவர்! பலர் நாடகம் எழுதலாம்—நடிக்க வராது! ஆனால் நம் அண்ணா அவர்கள், நாடகமும் எழுதி நடிக்கவும் கூடியவர். நடிப்பது மட்டுமின்றி நாடகம் பயிற்றுவிக்கக் கூடிய சிறந்த டைரக்டருமவார்!

"பலர் எழுதலாம்; பேசலாம், நடிக்கலாம், அரசியல் தலைவராகலாம்; ஆனால் போராட்டம்—சிறை என்றால், பின் வாங்குவார்கள்! ஆனால் நம் அண்ணா அவர்கள் போராட்டத்திற்கும் அஞ்சாமல் ஈடுபட்டு ஐந்துமுறை சிறை சென்றிருக்கிறார்கள்!

"அறிஞர் அண்ணா அவர்கள் சாதாரணமாக அரசியல் அறிஞர் மட்டுமல்ல—ஓர் அரசியல் மேதை.

"பலர் எழுத்தாளராகவும், பேச்சாளராகவும், பத்திரிகை ஆசிரியராகவும் இருப்பார்கள்; ஆனால் பலருடன் அமர்ந்து உரையாடிப் பழகுவதில்லை; நமது அண்ணா அவர்கள் உடன் தோழர்கள் பலருக்கும் மத்தியில் அமர்ந்து மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருப்பார்கள். அந்த உரையாடலில் நகைச்சுவை இருக்கும்; நல்ல அனுபவக் கருத்துக்கள் இருக்கும்; அறிவுரைகள் இருக்கும்.

'அரசியல் துறையில் தன் அறிவைப் பயன்படுத்தி புகழ் ஈட்டிய அரசியல் தலைவர் யாரேனும் உண்டா? செல்வாக்கைப் பயன்படுத்தி பணமும் புகழும் ஈட்டும் தலைவன் இருக்கலாம்—தன் உழைப்பால் தன் அறிவால் ஈட்டியவர் நம் அண்ணாதான்!

"அண்ணாதுரைக்கு 'அறஞர்' என்ற பட்டம் யார் கொடுத்தது—என்று சிலர் கேட்கிறார்கள். அன்பின்வழி அழைக்கும் அடைமொழிக்கும் பட்டத்திற்கும் வித்தியாசம் தெரியாதவர்கள்தான் அப்படிக் கேட்பவர்கள்!

"அறிஞர் என்பது, இராவ்பகதூர் — திவான்பகதூர் — பாரத் பூஷன்—பத்மவிபூஷன் என்பன போன்று சட்டம் போட்டுக் கொடுத்த பட்டமல்ல; நாம் அன்பால் அழைக்கும் அடைமொழி. நாம் அழைக்கிறோம்—'அறிஞர் அண்ணா' என்று! அவர்களை யார் அழைக்கச் சொன்னது? 'எங்கள் அண்ணாவை அறிஞர் என்றுதான் அழைக்க வேண்டும்' என்று நாம் அவர்களை வற்புறுத்தினோமா?

நீ, எங்கள் அண்ணாவை அறிஞர் என்று கூப்பிட வேண்டாம்! தோழர் அண்ணாதுரை என்று கூப்பிடு! காம்ரேட் அண்ணாதுரை என்று சொல்லு! அல்லது நண்பர் அண்ணாதுரை என்றுதான் சொல்லு! உனக்கென்ன, அண்ணாவே வந்து கட்டளையிட்டாரா? "என்னை அறிஞர் என்றுதான் கூப்பிட வேண்டும்" என்று உத்திரவு போட்டாரா?

'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு என்னும்போது, பஞ்சவர்ணக் கிளிககு அதன் குஞ்சு பொன் குஞ்சாக இருக்காதா? சாதாரண ஆட்களையெல்லாம என்னென்னமோ அடைமொழியால் சிலர் அழைக்கும்போது நமது ஒப்பற்ற தலைவரை 'அறிஞர்' என்று நாம் அழைப்பதில் தவறென்ன?

'அண்ணா அவர்கள் கூறுவார்கள்—'நம் கழகம் வளரக் காரணம் நாம் அல்ல; நாம் ஏந்தியிருக்கும் தூய்மையான கோள்கைதான்'—என்று! நம் கருத்து சோடையாக இருந்திருக்குமானால் நாம் இந்த வளர்ச்சியை அடைந்திருக்க முடியாது.

'நம்முடைய கொள்கை இந்த நாட்டை வாழ வைக்கும் கொள்கை! வீழ்ச்சியுற்ற திராவிடத்தை எழுச்சி பெறச் செய்யும் கொள்கை! நமது மொழியை——கலையை—பண்பாட்டை. காப்பாற்றும் கொள்கை! இத்தகைய கொள்கையைத் தாங்கி பணியாற்றும் நாம் நமது ஒப்பற்ற வழிகாட்டியான அண்ணா அவர்களின் வழி நடப்பதால்தான், நமது கழகம் வலிவும் பொலிவும் மிக்கதாய் வளர்ந்தோங்கி வருகிறது.

"நமது அண்ணா அவர்களின் பொன் விழாவான இன்று அவர் காட்டும் வழி நடப்போம்! மேலும் வலிமை பெறுவோம்! வெற்றி பெறுவோம்—என்று கூறி விடைபெறுகிறேன்."

அண்ணா ஒரு அதிசய மனிதர்

(சட்ட சபைத் தலைவர் டாக்டர் யூ. கிருஷ்ணா ராவ்)

தலைவர் தந்தை அவர்களே! அண்ணா அவர்களே!

நான் இங்கு தமிழில் பேச முதலில் தயங்கினேன். கே. ஆர். ராமசாமி எங்களையெல்லாம் குழந்தைகள் என்று சொல்லிவிட்டதால்—"குழந்தைகள் எப்படி வேண்டுமானாலும் பேசலாம், குழந்தை பேசுவது மழலை மொழி தானே" என்று நினைத்து தைரியத்தை வரவழைத்துக் கொண்டு விட்டேன். இப்போது இங்கே தமிழில்தான் பேசப் போகிறேன்,

எனக்குத் தமிழே பேசத் தெரியாது. இப்போதுதான் கொஞ்சம் கொஞ்சமாக தமிழை கற்றுக் கொண்டு வருகிறேன். நான் தமிழைக் கற்றுக் கொள்வதற்குக் காரண கர்த்தா அண்ணாதான். அண்ணா அவர்களுடைய பேச்சைக் கேட்க ஆரம்பித்ததுமே எனக்கும் தமிழில் பேச வேண்டுமென்று எண்ணம் உண்டாயிற்று! எனவே, இங்கு பெருந் தலைவர்கள் எல்லோரும் இருக்கிறார்கள். நான் பேசும் தமிழில் ஏதாவது குற்றம், குறை இருந்தால் மன்னிக்க வேண்டும்.

மதிப்பிற்குரிய அண்ணா அவர்கள் படத்தைத் திறந்து வைத்திருக்கிறேன். "அண்ணாவைப்பற்றி நான் என்ன பேசப் போகிறேன்" என்று எனக்குஆச்சரியமும், அச்சமும் ஏற்பட்டது! அண்ணாவைப் பற்றி யார்தான் பேச முடியாது, உலகம் தெரிந்த அண்ணாவைப்பற்றி எல்லோரும் தான் பேசலாம்!

அண்ணா அவர்களோடு பழகும் பாக்கியம் இரண்டு ஆண்டுகளாகத்தான் கிடைத்திருக்கிறது. என்றாலும் அவரைப் பற்றி எவ்வளவோ தெரிந்து கொண்டிருக்கிறேன். தெரிந்துக் கொள்ள வேண்டிய விஷயமும் அதிகம் இருக்கின்றது!

(10-ம் பக்கம் பார்க்க)

எனது அண்ணன்

கே. ஆர். இராமசாமி

இங்கே நடைபெறுகிற இந்த பொன் விழாவைக் கண்டுபெருமைப்படுகிறேன். நமது அண்ணா அவர்களுக்கு 50 வயது பூர்த்தியாகி விட்டதைக் கண்டு நாடு, நகரம், பட்டி, தொட்டி எங்கும் குதூகலத்தைக் காண்கிறோம்! மூலை முடுக்கெல்லாம் விழாக் கோலம் பூண்டிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியும் அடைகிறோம்!



அண்ணாவின்பெருமையை அருமையை, மதிப்பை நான் நன்குணர்ந்தவன்! பல ஆண்டு காலமாக கூடவே இருந்து பணி புரிந்து வருபவன்! அவர் நாட்டிற்கும், கலைக்கும் செய்த சேவையை அளவுகோல் கொண்டு அளந்து கணக்கிட்டுச் சொல்லமுடியாது! ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டு காலமாக அவர் தன்னை நாட்டுக்கே அர்ப்பணித்துக்கொண்டுவிட்டார்!

தம்பி ராஜேந்திரன் நாடகங்களைப் பற்றி குறிப்பிட்டு பேசினார்! அண்ணாவின் நாடகம் எவ்வளவு வலிமை பொருந்தியது என்பதை எடுத்துக் காட்ட உங்களுக்கு ஒருசம்பவத்தை நினைவூட்ட விரும்புகிறேன்.

அண்ணா எழுதிய சந்திரமோகன் நாடகத்தில் நான் சந்திரமோகனாகவும், சம்பத் சிவாஜியாகவும், அண்ணா காகப் பட்டராகவும் நடிப்பது வழக்கம்.

சிவாஜி (சம்பத்) காகப் பட்டர் (அண்ணா) காலில் விழுவார்! உடனே நான் (சந்திரமோகன்) மராட்டிய மண்டலமே! மண்டியிடாதே என்று போய் தடுப்பேன்! அப்போது காகப்பட்டரை (அண்ணாவை)ப் பார்த்து போதுமடா நிறுத்து! உன் மோசடி வார்த்தையை நம்ப மாட்டோம் என்று கூறுவேன்! இதைக்கூறும்போது வார்த்தைகளே சரியாக வராது! வெட்கமாக இருக்கும் "என்னடா இது, நமது அண்ணாவைப்போய்நிறுத்தடா உன் மோசடியை என்று சொல்வது" என்று நினைப்பேன்!

இந்த நாடகத்திலே வீரத்தின் பெருமையைப்பற்றியும் சூதுவாதுபுரிபவர்களின் வஞ்சகச் செயல்கள் பற்றியும் அண்ணா அருமையாகவிளக்கி இருக்கிறார்! வீரத்தைஎப்படி எப்படி ஒழித்துக்கட்டி இருக்கிறார்கள் என்பதை நன்கு விளக்கி இருக்கிறார்!

நமது அண்ணாவைப்போல் ஒருஉண்மையான தலைவரை நாம் எங்குதேடினாலும் பெற முடியாது! இதைப்பலர் இன்னும் உணர மறுக்கிறார்கள்!

ரஷ்யர்கள் சந்திர மண்டலத்தில் கொடி நாட்டி விட்டார்கள்! சீக்கிரமே அந்த ரஷ்யா இதைவிட நல்ல அதிசயமான விஞ்ஞான கருவிகளைக் கண்டுபிடித்துக் கொண்டு நம் நாட்டிற்கு வர வேண்டும்! ரஷ்யர்கள் வர வேண்டுமென்றால் இந்த நாட்டை ஆள்வதற்காக வர வேண்டுமென்று சொல்லவில்லை!

இங்குள்ள தலைவர்களையெல்லாம் கூப்பிட்டு வரிசை வரிசையாக நிறுத்திவைத்து தாங்கள் கண்டுபிடித்தகருவியின் மூலம் இந்தத் தலைவர்களில் யார் உண்மையான தலைவர்-எத்தனை பேர் நாட்டுக்காகப் பாடுபடும் தலைவர் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும்!

ஒரு 1000 தலைவர்களை நிறுத்தி வைத்து இதில் யார் யார் உண்மையான தலைவர்கள் என்று கண்டு பிடிக்க முடியுமானால் நாட்டுக்காக சேவை செய்யும் தலைவர்கள் ஒரு நூறு பேர்கூட இருக்க மாட்டார்கள்!

அந்த நூறு பேரிலும்கூட எத்தனைபேர் உண்மையாகப் பாடுபடுபவர்கள் என்று பார்த்தால் ஒரு இரண்டு மூன்று பேர்கள் கூட இருக்க மாட்டார்கள்! இவர்களில் எத்தனை பேர் சுயநலமின்றி, மக்கள்வாழ்வு உயர, நாட்டின்வளம்பெருக பாடு பாடுகிறார்கள் என்று பார்த்தால் நமது அண்ணா ஒருவர்தான் தலைவராக மிஞ்சுவார்!

போலிகள்நிரம்பிய இந்த நேரத்தில்உண்மைக்குப்பாடுபடுபவர்களைக்கண்டு பிடிக்க விஞ்ஞானத்தின் உதவியைக் கொண்டு ஒரு கருவியை கண்டுபிடிக்க வேண்டியது மிகமிக அவசியமாகும்! அப்படிக் கண்டு பிடித்தால் போலித் தலைவர்களெல்லாம் ஒழிவார்கள் என்று கூறி வாழ்க அண்ணா என்று என் ஆசையை வாழ்த்துரையாக வழங்கி முடித்துக் கொள்ளுகிறேன்!

திருமணம்



தோழர் மா. செங்குட்டுவன் — தோழியர் அரவிந்த நாயகி ஆகியோரின் திருமணம் கடந்த 31-8-59 காலை தஞ்சையை அடுத்த திருவேதிகுடியில், ஆலத்தம்பாடி திரு. சுந்தரேசனார் தலைமையில் சிறப்புற நடந்தேறியது.

மணமக்கள் சார்பில் தோழர்கள் மா. முத்துகிருஷ்ணன் பி.ஏ., சி. தியாகராசன் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர். மணமக்களை வாழ்த்தி பேராசிரியர் க. அன்பழகன் எம்.ஏ., எம்.எல்.ஏ., சொ. அமிர்த கணேசன் பி.ஏ., எம். தியாகராசனார், இளமுருகு-பொற்செல்வி, எஸ். கைலாசம், சா. கணேசன் எம்.சி., இரங்கநாதன் எம்.சி., திருவையாறு வையாபுரி, பி. சேஷய்யா, மா. இளங்கோ ஆகியோர் பேசினர்.

மணமக்களை வாழ்த்தி அண்ணா, பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன், மு. கருணாநிதி எம். எல். ஏ., சென்னை மேயர் அ. பொ. அரசு ஆகியோர் உட்பட தலைவர்கள் பலரிடமிருந்தும், பல துறை பிரமுகர்களிடமிருந்தும் பர்மா தி. மு. க. உட்பட பல்வேறு கிளைக் கழகங்களிடமிருந்தும் ஏராளமான வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன,

இறுதியாக மணமகன் நன்றி தெரிவித்தபின் விழா இனிது முடிவுற்றது.

2-ம் பக்கத் தொடர்ச்சி

இதில் எது தமிழ், நிதி அமைச்சர் சொல்லட்டும்.

பழக்க வழக்கத்தால், வாழும் முறையால், வசதியால் சில பல இடங்களில் பேசும் மொழியில் வேற்றுமை உண்டுதான். இதனால் ஒருபகுதியில்வாழும் மக்களைப் படித்தகூட்டமென்றும், இன்னொரு பகுதியில் வாழும் மக்களை முட்டாள்கள் என்றும் சொல்ல முடியுமா?

நிதி அமைச்சர் இனியேனும் நாகரிகத்துடன் பேசுவார் என்று நம்புகிறோம்.

எங்களிடம் "ஒலிக" என்று சொல்லுபவர்கள் 10 பேர் இருந்தால்—உங்களிடம் "வாள்க" என்று சொல்லுபவர்கள் 99 பேர்கள் இருக்கின்றார்கள் என்பதையெல்லாம் உணர்ந்து பேசவேண்டுகிறோம்.

நீங்கள் எல்லோருமே காந்தியாக இருக்க முடியாது—இருக்கவில்லை.

அதேபோல் நாங்கள் அனைவருமே அண்ணாவாக இருக்க முடியாது.

படித்தவன்தான் அரசியலிலே ஈடுபட வேண்டும், மொழிக்காகப் பாடுபட வேண்டுமென்று சொன்னால் உங்களுக்கு ஒரு ஆள் கூட கிடைக்காது! இதை நிதி அமைச்சர் உணர வேண்டும்! உணர்வாரா?

Registered as a Newspaper in CEYLON
Regd No. M. 7074 MALAIMANI விலை 16 காசு Phone No. 8?285

நமது கண்ணான அண்ணாவுக்குப் பொன் விழா :
நகர மக்கள் சார்பில் வாழ்த்துகிறேன் !
சென்னை மேயர் பாராட்டு !

“நமது கண்ணான அண்ணா அவர்களின் 50-ஆம் ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொள்வதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன். நான் 1938-ஆம் ஆண்டில் பள்ளி மாணவனாக இருந்த காலத்தில் அண்ணா அவர்களை, பெத்துநாயக்கன் பேட்டையில் உள்ள அவரது வீட்டிலே அடிக்கடி பார்த்து மகிழ்ந்து கொண்டிருப்பேன். அண்ணா அவர்களைப் பார்ப்பதிலேயே எனக்கு ஒரு தனி மகிழ்ச்சி ஏற்பட்டது.”

“பெத்துநாயக்கன் பேட்டை படவேட்டம்மன் கோயில் தெருவில் ஒரு முறை பொதுக் கூட்டமொன்றில் அண்ணா அவர்கள் பேசிக் கொண்டிருந்த போது, மாற்றுக் கட்சியினர் அழுகிய முட்டையால் அடித்தார்கள். அப்பொழுது நான் மிக்க வேதனைப் பட்டேன். ‘அண்ணா அவர்கட்கும் ஒரு காலம் வரும்; இன்று அவரை முட்டையால் அடிப்பவர்களெல்லாம் அப்பொழுது அண்ணா அவர்களைப் பாராட்டுவார்கள்’ என்று நினைத்தேன்; அதே போல, இன்று அண்ணா அவர்களை எல்லாக் கட்சியினரும் பாராட்டும் காலம் வந்திருக்கிறது. அண்ணா அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து நமக்கெல்லாம் வழி காட்ட வேண்டுமென்று என் சார்பிலும், நகர மக்கள் சார்பிலும் வாழ்த்துத் தெரிவித்துக் கொள்கிறேன்.”

என்றும் அண்ணா தான்!

(பி. டி. ராஜன்)

இன்று நமது மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை அவர்களுக்கு ஐம்பதாண்டு நிறைந்து விட்டது என்ற செய்தி என்னை மகிழ்ச்சியடைய வைக்கிறது. திரு. கே. ஆர். ராமசாமி கூறினார்கள் எங்களையெல்லாம் குழந்தைகள் என்று! அறுபது வயதானால் தான் குழந்தையாக மாறுவதாகக் கூறுவார்கள்! அப்படிப் பார்க்கப் போனால் இங்கே இருப்பவர்களில் நான் மட்டும் தான் குழந்தை! நமது மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்கள் இன்னும் ஒரு வருடத்திற்குப் பின்பு தான் குழந்தைப் பருவத்தை அடைவார்கள்! அப்படிப் பார்க்கப்போனால் அண்ணா அவர்கள் குழந்தைப்பருவத்தை அடைய இன்னும் பத்து வருடங்களாகும்!

ஆனால் நமது அண்ணாவுக்கு அறுபது வயது ஆனாலும், எழுபது வயதானாலும்—என்றுமே அவர் நமக்கெல்லாம் அண்ணாவாகத்தான் இருப்பார்! அவர் இளைஞர்களுக்கு மட்டுமல்ல, என் போன்ற முதியவர்களுக்கும் எப்போதுமே அண்ணாவாகத் தான் இருப்பார்!

இந்த 50 வயது ஆண்டு நிறைவில அவரை வாழ்த்துகிறேன்—பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறேன்! நாடு நலம் பெற அவர் நீடூழி காலம் வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

(இலட்சிய நடிகர் நடத்திய புதுமனைப்புகு விழாவின் போது திரு. பி. டி. ராஜன் அவர்கள் பேசியதின் சுருக்கமாகும்)

அறிவிப்பு

இந்த இதழில் இடமில்லாத காரணத்தால் “சுடுகாட்டுச் சாம்பல்” இடம் பெறவில்லை. அடுத்த இதழ் முதல் தொடர்ந்து வெளி வரும்.

இதயம் கவர்ந்தவர்

சிவஞானம் வாழ்த்துகிறார்

திரு. சி. என். அண்ணாத்துரை எம். எ. அவர்கட்கு, ஐம்பதாண்டு நிறைவு பெற்று ஐம்பத்தோராவது ஆண்டு பிறப்பதாக அறிகிறேன். பொது வாழ்வில் கால் நூற்றாண்டுகட்கு மேலாக, பலவித இன்னல்களுக்கிடையே மக்கள் நலன் கருதிப் பணியாற்றிவரும் அவரைப் பாராட்டுகிறேன். எண்ணற்ற இளைஞர்களின் இதயங்களில் இடம் பெற்றுவிட்ட திரு. அண்ணாத்துரை அவர்கள் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து தாயகத்துக்குப் பணிபுரிந்துவரப்பிரார்த்திக்கின்றேன்.

அன்புள்ள,
ம. பொ. சிவஞானம்

6-ம் பக்கத் தொடர்ச்சி

நான் சொல்லுவது தவறோ, சரியோ—நான் எதைச் சொன்னாலும் என் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு நடப்பவர் அண்ணாவும். அவரது கட்சித் தோழர்களும் தான்! இந்த அடக்கத் தன்மை வேறு யாருக்குமே வராது என்றுகூட சொல்லுவேன்!

இப்படிப்பட்ட அதிசய குணம் படைத்த அண்ணாவுக்கு ஐம்பது வயது ஆகிவிட்டதே என்று எவருமே கவலைப்பட வேண்டாம். நான் ஒரு டாக்டர்—அவரைப் பாதுகாக்க எனக்கு தைரியம் உண்டு!

“அண்ணாதுரை பல்லாண்டு வாழ்ந்து நாட்டுக்கு நல்ல சேவையைச் செய்ய வேண்டும்” என்று இறைவனை பிரார்த்திக்கிறேன். இதைத் தான் சட்டசபையில் உள்ள 200 அங்கத்தினர்களும் சொல்லுவார்கள்! எனவே அவர்கள் சார்பாகவும் நான் அண்ணாவை வாழ்த்துகிறேன்!

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

‘இவர்தான் எங்கள் அண்ணா’ என்று சொல்லிக் கொள்வதை விட உலகத்தில் ஒரு பெரும் சிறப்பு வேறு என்ன இருக்கிறது. உங்களுடைய தலைமையின் கீழ் பணி புரியும் எங்களுக்கு பசி இருக்காது, பிணி இருக்காது, சிறையா? அஞ்சமாட்டோம்! மரணமா கலங்க மாட்டோம்! வெற்றிக் கோட்டையை நிர்மாணிப்போம் என்று கூறி எனது நன்றியை தெரிவித்துக்கொண்டு விடை பெறுகிறேன்.

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி. எஸ். இளங்கோ, கல்விப் பிரகாசம் பிரஸ். 404 திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை-5
அலுவலகம்: 1-35, வாணியர் தெரு, சென்னை-14.